Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள்
இல்லங்களிலிருந்து உங்கள் உறவுகளுடன்
INTERNET
மூலமாக உறவாட,
உள்ளூர், வெளியூர்
துரித தொலைத் தொடர்புகட்கு
'திருமுருகன் கொம் நெற்'
இல. 46, ஆடியபாதம் வீதி,
(ப. நோ. கூ. ச. முன்பாக)
திருநெல்வேலி.
T.P.021-222-7310
(சி-1771)

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 01 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 22 (17.11.2003) திங்கட்கிழமை இதழ்:48

## இலங்கை அரசியல் நெருக்கடியை அடுத்து
# இந்திய இராணுவம் உஷார் நிலையில்; நிலமையை அவதானிக்கவும் பணிப்பு!

## பிரதி இராணுவத் தளபதி தெரிவிப்பு

(புதுடெல்கி)

**இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியைத் தொடர்ந்து, புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் சிக்கலுக்குள்ளாகியுள்ளதை அடுத்து இந்திய இராணுவத்தினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக - இந்திய இராணுவத்தின் பதில் தளபதி லெப்.ஜெனரல் சந்தனு சௌத்திரி தெரிவித்தார்.**

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கை ஒரு நாடு என்ற வகையில் இருந்தால் எமக்கு பாதுகாப்பு தொடர்பில் அச்சுறுத்தல் இல்லை. தற்போதைய சமாதான முயற்சியில் ஏற்பட்டுள்ள குழப்பநிலையை அடுத்து நாமும் சற்று விழிப்புடன் இருக்க வேண்டும். எனவே பின்னால் வரும் விளைவுகளுக்கு ஏற்ப எமது செயற்பாடுகள் திட்டமிட்ட ரீதியில் இருக்க வேண்டும்.

இலங்கையில் தற்போது நடக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஈராக்கில் மீண்டும் இராணுவ நடவடிக்கை

ஈராக்கின் தலைநகர் பக்தாத்துக்கு அருகிலுள்ள மறைவிடங்களில் ஒளிந்துள்ள சதாம் ஆதரவுப் படையினர் மீது அமெரிக்கப் படைகள் நேற்றிரவு 9 மணியளவில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளன.

செய்மதி வழிகாட்டல் ஏவுகணைகள், ஜெட் போர் விமானங்கள், டாங்கிகள் சகிதம் ஆயிரக்கணக்கான அமெரிக்கப் படைகள் 'ஒப்பரேசன் அயன் ஆமர்' என்ற இந்த இராணுவ

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் நெருக்கடி நிலை குறித்து சந்திரிகா - ரணில் நாளை சந்திப்பு!

(கொழும்பு)

தற்போதைய அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நாளை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

கண்டியில் மகாநாயக்கர்களைச் சந்தித்த பின்னர், இரு தலைவர்களும் சந்தித்து அரசியல் வேறுபாடுகளைத் தீர்த்துக்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டிருந்தது.

இதற்கமைய நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் கலந்துகொள்ளவுள்ளார்.

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருக்கு ஜனாதிபதி சந்திரிகா அவசர அழைப்பு!

(கொழும்பு)

அவசர சந்திப்பொன்றில் கலந்து கொள்ளுமாறு, தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அழைப்பு விடுத்துள்ளதாக இணையத்தளம் ஒன்று - ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து மேற்படி இணையத்தளம் செய்தி வெளியிடுகையில், கூட்டமைப்பினருக்கு சந்திப்புக்கான அழைப்பு விடுக்கப்பட்டபோதும், அதற்கான திகதி குறிப்பிடப்படவில்லையென்றும், ஆனால் இந்த வார இறுதிக்குள் இந்தச் சந்திப்பு நடைபெறக்கூடிய சந்தர்ப்பம் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில், தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், நீண்ட பேச்சுக்களை நடத்த ஜனாதிபதி சந்திரிகா விரும்புவதாகவும், இந்தக் கூட்டத்தில் வைத்து புதிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைக்கோர அவர் தீர்மானித்திருப்பதாகவும் அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் நெருக்கடிநிலைமை குறித்து கூட்டணிக் கட்சிகளுடன் ரணில் பேச்சு!

(கொழும்பு)

தற்போதைய அரசியல் நெருக்கடிகள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் அடுத்த சில நாட்களுக்குள் நடைபெறவுள்ள சந்திப்புக்கு முன்னோடியாகவே பிரதமர் இந்தச் சந்திப்புக்களை நடத்திவருகின்றார்.

நேற்று ஆரம்பமான இந்தக் கலந்துரையாடல் முதலில் இந்தியாவிலிருந்து திரும்பிய இ.தொ.கா. தலைவர் ஆறுமுகம் தொண்டமானுடன் இடம்பெற்றது.

அடுத்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இந்தக் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது.

## நாடாளுமன்றம் மீண்டும் 19 ஆம் திகதி கூட்டப்படும்!

செயலாளர் நாயகம் அறிவிப்பு

## ஜே.வி.பியுடன் கூட்டணி அமைக்கப்படாவிட்டால்
## நாடாளுமன்றத் தேர்தலைப் புறக்கணிக்க பொ.ஐ.மு. எம்.பிக்கள் 25 பேர் தீர்மானம்!

# 19 ஆம் திகதி கூட்டப்படும்!

## செயலாளர் நாயகம் அறிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றம் நாளை மறுதினம் கூட்டப்பட்டு வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் என நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் பிரியாணி விஜேசேகர அறிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர் விடுத்த அறிவித்தலிலேயே இதனைத் தெரிவித்தார்.

அந்த அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் கடந்த 4 ஆம் திகதி ஒத்தி வைக்கப்பட்ட நாடாளுமன்றம் நாளை மறுதினம் கூட்டப்படவுள்ளது.

நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வாக இடம்பெறவுள்ள இந்தக் கூட்டம் காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்.

அன்றைய தினம் முக்கிய நிகழ்வாக மாலை 2.30 மணிக்கு நிதி அமைச்சர் கே.என.சொக்ஸியால் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு இது தொடர்பாக உரை இடம்பெறவுள்ளது.

# நாடாளுமன்றத் தேர்தலைப் புறக்கணிக்க பொ.ஐ. மு: எம்.பிக்கள் 25 பேர் தீர்மானம்!

(கொழும்பு)

இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன்னதாக ஜே.வி.பியுடன் கூட்டணி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படாவிட்டால், அடுத்த நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் தாம் போட்டியிடப் போவதில்லை என்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் குழுவொன்று தீர்மானித்துள்ளது.

முன்னாள் சபாநாயகரும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரா பண்டாரநாயக்கவின் இல்லத்தில் நடந்த கூட்டமொன்றிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இந்தக் கூட்டத்தில், 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்குபற்றியதாகக் கூறப்படுகிறது. இவர்களில் அநுரா பண்டாரநாயக்க, தினேஷ் குணவர்த்தன, மங்கள சமரவீர, ஜனக பண்டார தென்னக்கோன், திலான் பெரேரா, அர்ஜுனரணதுங்க, கே.பிரத்ன நாயக்க, மகிந்தானந்த அலுக்கமகே, சுமதிபால ஹேரத் ஆகியோரும் உள்ளடங்குவதாகத் தெரியவருகிறது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜே.வி.பியுடனான கூட்டணியை அமைப்பதற்கு யார் தடையாக இருக்கிறார்கள் என்ற இரகசியத்தை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# 10 நாட்களுக்குள் அகற்றக் கோரிய முகாமை ஜனாதிபதி சந்திரிகா ஏன் அகற்றவில்லை?

## கேள்வியெழுப்புகிறார் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன

(கொழும்பு)

பத்து நாட்களுக்குள் குரங்கு பாஞ்சானில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாமை அகற்றுமாறு வற்புறுத்திய ஜனாதிபதி, ஏன் இன்னும் அவர் அதனைச் செய்யவில்லை என கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன.

நேற்று பலாங்கொடையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது -

நான் பாதுகாப்பு அமைச்சராக கடமையாற்றியபோது, குரங்கு பாஞ்சானில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முகாமை அகற்ற உடன் நடவடிக்கை எடுக்குமாறும், பத்து நாட்களுக்குள் இதனைச் செய்து முடிக்குமாறும் ஜனாதிபதி கோரியிருந்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சியிலிருந்து நோர்வே முற்றாக வெளியேறிவிட வேண்டுமாம்!

## எச்சரிக்கை விடுக்கிறது சிஹல உறுமய

(கொழும்பு)

சமாதான முயற்சியிலிருந்து தற்காலிகமாக விலகிய நோர்வே, அதிலிருந்து முற்றாக வெளியேற வேண்டுமென சிஹல உறுமய தெரிவித்துள்ளது.

நேற்று இந்தக் கட்சி வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

தெற்கில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியைக் காரணம் காட்டி சமாதான முயற்சியிலிருந்து நோர்வே தற்காலிகமாக விலகியுள்ளமையானது சந்தர்ப்பவாத நடவடிக்கையாகும்.

ஜனாதிபதி முக்கிய மூன்று அமைச்சுக்களை பொறுப்பேற்றுள்ள

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
email . jaffna @ expoavi . com.
(சி -1753)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# கச்சேரி முன் திருடப்பட்ட ஓட்டோ அச்சுவேலியில் மீட்கப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

கடந்த வெள்ளிக்கிழமை திருடப்பட்ட ஓட்டோ- அச்சுவேலிப் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் பொலிசாரினால் மீட்கப்பட்டுள்ளது.

கொக்குவிலில் வசித்து வந்தவரின் ஓட்டோ கடந்த வெள்ளியன்று யாழ். கச்சேரிக்கு முன்பாக திருடப்பட்டது. இந்த ஓட்டோ திருடப்பட்டுப் போனது தொடர்பாக ஓட்டோ உரிமையாளர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவந்தனர்.

அச்சுவேலிப்பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் ஓட்டோ ஒன்று நிற்கின்றது என்று கிடைத்த தகவலை அடுத்து, அப்பகுதிக்கு விரைந்து சென்ற பொலிஸார் ஓட்டோவை மீட்டுள்ளனர்.

திருடர்கள் இந்த ஓட்டோவில் இருந்த சில பொருட்களை திருடி விட்டு ஓட்டோ வினை கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். ஓட்டோவினை மீட்ட பொலிஸார் அதனை யாழ். பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். மேற்படி சம்பவம் தொடர்பாக யாழ் பொலிஸ் நிலையப் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

# கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசம் அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது!

## மக்களை மீளக்குடியமர்த்தவும் நடவடிக்கை

தலைமன்னார்பகுதியில் கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசங்கள் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தால் நேற்றுமுன்தினம் காலை 11 மணியளவில் மன்னார் அரசாங்க அதிபரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

எவ்.எஸ்.பி.எ நிறுவனமும் மற்றும் மனிதாபிமான கண்ணிவெடிய கற்றும் பிரிவினரும் இணைந்து கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பிரதேசத்தினை அரச அதிபர் வி.விஸ்வலிங்கத்திடம் கையளித்தனர்.

இந்தப் பகுதியிலிருந்து 1565 மிதிவெடிகள், 15 வெடிக்காத நிலையிருந்த வெடிபொருட்கள், 10 கிளைமோர் குண்டுகள் என்பன அகற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் தலைமன்னார் பியர் பகுதி மக்களை குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவென, பியர் பகுதி கிராம சேவகர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.



கைதடி சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில் இடம்பெற்ற கைதடி சித்த ஆயுர்வேத வைத்தியசாலையை அபிவிருத்திசெய்வது தொடர்பான கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி தி.பத்தினியம்மா, கொரியாவின் இலங்கைக்கான பிரதித் தூதுவர் கிம்யோங் மற்றும் இலங்கை சுதேச வைத்தியத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டதைப் படத்தில் காணலாம்.



சுதுமலை உயிர்ப்பூட்டல் குழுவினரால் நடத்தப்பட்ட முதியோர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கியூடெக் இயக்குநர் சி.ஜி.ஜெயக்குமார் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படத்தில் காணலாம். (ஏ1)




உலக உணவு தினத்தின்போது குடத்தனை அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கு பருத்தித்துறை பிரதேசசபை செம்பியன்பற்று உப அலுவலகப் பொறுப்பதிகாரி பொ.தங்கராசா இலைக்கஞ்சி வழங்குவதைப் படத்தில் காணலாம். (9)

# சின்னஞ் சிறு செய்திகள்

## மாவீரர்தின நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல்

வடமராட்சி வடக்கு கடற்தொழில் சங்கப் பிரதிநிதிகளுக்கான மாவீரர் தின நிகழ்வு ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு சம்பிரமம் கடற்தொழிற் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைத்துக் கடற்தொழில்சங்கப் பிரதிநிதிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழுவின் பிரதிநிதி க.சூரியகுமார் கேட்டுள்ளார்.

## சனசமூக நிலையத் திறப்பு விழா

கடந்தகால யுத்த நடவடிக்கையின்போது மோசமாகச் சேதமடைந்து தற்போது 'அம்டா' நிறுவனத்தால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வரும் மட்டுவில் வடக்கு ஸ்ரீ வேற்பிள்ளை சனசமூகநிலைய புனர்நிர்மான வேலைகள் யாவும் முடிவுறும் நிலையிலுள்ளது.

சனசமூகநிலையமும், நூலகமும் இணைந்ததாக அமைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டிடம் எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை வைபவரீதியாகத் திறந்து மக்கள் பாவனைக்கு விடப்படவுள்ளது. (24)

## சுகாதாரத் தொண்டர்களுக்கான கருத்தமர்வு

(சுதுமலை)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கான விசேட கருத்தமர்வு - இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து 4 நாட்கள் வரை மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பிரிவுக்குட்பட்ட 50 சுகாதாரத் தொண்டர்களுக்கான கருத்தமர்வுக்கான அனுசரணையினை யுனிசெப் நிறுவனம் வழங்குகின்றது.

இந்தக் கருத்தரங்கில் ஒவ்வொரு துறைசார்ந்தவர்களினால் சுகாதாரம் தொடர்பான விரிவுரைகள் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (91)

## முன்பள்ளி விளையாட்டு விழா

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு போக்கறுப்பு கேவில் கிராமசேவகர் பிரிவிலுள்ள மங்கை முன்பள்ளியின் விளையாட்டுப்போட்டி கேவில் அ.த.க. பாடசாலையில் இன்று நடைபெறவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஆதரவுடன், பிரதேசகல்வி மேம்பாட்டு நிலைய வழிகாட்டலில் வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வுக்கழகத்தினால் இந்த விளையாட்டுப்போட்டி நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. (17)

## மட்டுவிலில் வீடமைப்பு உதவி

(மட்டுவில்)

கடந்தகால யுத்த நடவடிக்கையின்போது - வீடு சேதமடைந்த, முற்றுமுழுதாகப் பாதிப்படைந்த மற்றும் வீடற்ற மட்டுவில் வடக்கு, மட்டுவில் கிழக்கு, சந்திரபுரம், கல்வயல் ஆகிய நான்கு கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு "கியூமெடிக்கா" நிறுவனத்தினரால் வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன. இதற்கான பயனாளிகளைத் தெரிவு செய்யும் நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி அந்தந்த கிராம அலுவலர் அலுவலகங்களில் நடைபெற்றது. (24)

## ஆசிரியர்களுக்கான ஆலோசனைக் கூட்டம்

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையிலும், க.பொ.த சாதாரண தரப் பரீட்சையிலும் கடமையாற்றவுள்ள ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டத்தைச் சேர்ந்த பரீட்சையில் கடமையாற்றவுள்ள ஆசிரியர்களுக்கான ஆலோசனைக்கூட்டம் நாளை பி.ப 2.00 மணியளவில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ்வலயங்களைச் சேர்ந்த பரீட்சையில் கடமையாற்றவுள்ள சகல ஆசிரியர்களையும் மேற்படி ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு - யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# மாகாணமட்ட சமூகக்கல்விப் போட்டிகள் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு

மாகாண மட்டத்திலான சமூகக் கல்வி பொது அறிவுப் போட்டிகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

சமூகக்கல்வி பொது அறிவுப் போட்டிகளில், வலய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான மாகாண மட்டத்திலான போட்டிகள் எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் நடைபெறுவதற்கான பரீட்சை நிலையமாக யாழ். வேம்படி மகளிர் கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் 6 ஆம், 7 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு காலை 10 மணி முதல் 10.30 மணி வரையும், 8 ஆம், 9 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு காலை 10 மணி முதல் 10.45 மணிவரையும், 10 ஆம், 11 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு முற்பகல் 11 மணி முதல் 12 மணி வரையும், 12 ஆம், 13 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு 11 மணி முதல் 1 மணி வரையும் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டியில் தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் அகில இலங்கை ரீதியாக நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றுவர். வலய ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை சமூகக்கல்வி பொது அறிவுப் போட்டிக்கு தயார்செய்யுமாறு, பாடசாலை அதிபர்களை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடத்திய போட்டி முடிவுகள் வருமாறு

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் பாலர் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட பேச்சு, மனனம், படம்தெரிவு, திருமுறை ஓதல் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விபரம் வருமாறு,

'ஏ' பிரிவில் -

பேச்சுப்போட்டியில் த.பவதாரணி, சி.திலக்சிகா, ப.ஆரணி ஆகியோரும்,

திருமுறைஓதல் போட்டியில்- ச.சக்திதாரணி, த.பவதாரணி, செ.புவிதாயினி ஆகியோரும்,

திருக்குறள் மனனப்போட்டியில் ச.சக்திதாரணி, தே.சாருஜன், யோ.வசீகரன் ஆகியோரும்,

'பி' பிரிவில் -

ஆத்திசூடி சொல்லல் போட்டியில் - ரா.ஷயந்தன், க.லதாங்கி, வி.சயித்தா ஆகியோரும்,

படம் தெரிவுப்போட்டியில் - தி.துவாரகன், க.லதாங்கி, பா.கிசாந்தி ஆகியோரும்,

திருமுறை ஓததுல் போட்டியில்- தி.துவாரகன், ரா.ஷயந்தன், அ.டிவேந்தன் ஆகியோரும் வெற்றிபெற்றுள்ளனர். (101)

# பேருந்துகளின் இருக்கைகள் மிகவும் சேதமடைந்துள்ளது

## பயணிகளுக்கு பெரும் சிரமம்

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பேருந்துகளின் இருக்கைகள் மிக மோசமாகச் சேதமடைந்திருப்பதால், பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாகிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது சேவையில் ஈடுபடுகின்ற பேருந்துகள் சிலவற்றின் இருக்கைகள் முழுமையாகச் சேதமடைந்திருப்பதால், பாடசாலை மாணவர்கள் உட்பட பயணிகள் பலரும் சிரமங்களுக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மிகநீண்டகாலமாகப் புனரமைக்கப்படாதுள்ள இந்த இருக்கைகளில் அமரும் பாடசாலை மாணவர்களின் சீருடைகள் அழுக்கடைவதாகவும், துருப்பிடித்த கம்பிகளினாலும் உடைகள் அழுக்கடைவதாகவும் மாணவர்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

பயணிகளின் போக்குவரத்து அசௌகரியங்களை நீக்குவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று மக்களால் கேள்வி எழுப்பப்படுகிறது. (83)

# கணவனை இழந்தவர்களுக்கு சுயதொழில் முயற்சிக்கு உதவி!

நெடுந்தீவிலுள்ள விதவைகளுக்கு சுயதொழில் முயற்சிக்கு உதவியளிக்கும் வகையில் பட்டினிக்கெதிரான இயக்க அதிகாரிகள் கடந்த புதன்கிழமை நெடுந்தீவுக்கு வந்து நிலமைகளை நேரில் அறிந்துள்ளனர்.

கிராம அலுவலர்களின் உதவியுடன் விதவைகளது வீடுகளுக்குச் சென்று, அவர்களுக்குத் தேவையான சமையல் உபகரணங்கள் மற்றும் பாவனைப்பொருட்கள் போன்றவற்றின் விபரங்களையும், சுயதொழில் செய்யக்கூடியவராக இருந்தால், அவர்களுக்கு எந்தவிதத்திலான உதவி தேவை போன்ற விபரங்களை அறிந்து சென்றுள்ளனர்.

இதனடிப்படையிலும், தேவையின் முன்னுரிமை அடிப்படையிலும் கிராம அலுவலர் பிரிவு ஒன்றில் 10 பேரைத்தெரிவு செய்து உடன் அனுப்பிவைக்குமாறு, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரிடம் கூறிச் சென்றுள்ளனர்.

குறித்த அரச சார்பற்ற நிறுவனத்தினர் நெடுந்தீவிலுள்ள விதவைகளுக்கு உதவி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரின் வேண்டுகோளை ஏற்றே இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## மேசைப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ இன் வருடாந்த உள்ளகப் போட்டியின் 2003 ஆண்டுக்கான மேசைப்பந்தாட்டம் நாளை மாலை 3.30 மணிக்கு வை.எம்.சி.ஏ உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெறும். வயதுக் கட்டுப்பாடுடைய ஆண், பெண் போட்டிகளும், ஒற்றையர், இரட்டையர், கலப்பு இரட்டையர் போட்டிகள் நடைபெறவுள்ளன. முதற்சுற்றுப்போட்டியாளர் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (205)

## முப்பது குடும்பங்களுக்கு மூவிமொண்டோ உதவி

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட சில்லாலை வடக்கு கிராமஅலுவலர் பிரிவைச் சேர்ந்த சுமார் 30 குடும்பங்களுக்கு மூவி மொன்டோ நிறுவனத்தால் கோழிகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

மேற்படி பிரிவில் வசிக்கும் கணவனை இழந்த குடும்பங்களுக்கே இந்த நிறுவனத்தால் அண்மையில் கோழிக்கூடு, கோழித்தீன், கோழிக்குஞ்சுகள் என்பன இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. (44)

ராஜா யாழ்ப்பாணம்.
விக்ரம், சூர்யா, லைலா நடித்த
பிதாமகன்
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30 (பு.நே)
இரவு 9.30 மட்டும்
XXX (ஆங்கிலம்)
(சி-1751)

நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், கிரண் நடித்த
திவான்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
AMERICAN BEAUTY
(சி-1752)

# ஒரு வருடத்துக்கு தேசிய அரசாங்கம்; ஆட்சியிலிருக்க அழைக்கிறார் சந்திரிகா!



(கொழும்பு)

தேசிய அரசாங்கமொன்றை ஒரு வருடத்துக்கு அமைத்து நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்க்க ஐ.தே. முன்னணி உட்பட மற்றைய கட்சிகளுக்கு மீளவும் அழைப்பு விடுத்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா.

நேற்றுமுன்தினம் அம்பாந்தோட்டை பகுதியில், நீர்ப்பாசனத் திட்டம் ஒன்றினைத் திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே, ஜனாதிபதி மேற்கண்ட அழைப்பை விடுத்தார். அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் -

சகல கட்சிகளும் கூட்டாக இணைந்து ஒரு வருடத்துக்குள் அல்லது அதற்கும் மேல் தேசிய அரசாங்கத்தை அமைத்ததன் பின்னர், தேர்தல் வரும்போது பல கட்சிகள் பங்குகொள்ளும் தேர்தலுக்குச் செல்லலாம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக் கொண்டதற்கு இணங்க, பாதுகாப்பு அமைச்சை நான் அவரது அரசாங்கத்திடம் கையளித்தேன். ஏனெனில், பாதுகாப்புத் தொடர்பாக அவர் திறமையாகச் செயற்படுவார் என்ற நோக்கிலாகும்.

ஏனைய ஜனாதிபதிகள் போலல்லாமல், நான் எழுபத்தைந்து வீதமான அதிகாரத்தை - இனப்பிரச்சினையைத் தீர்க்க பிரதமர் ரணிலிடம் கொடுத்திருந்தேன். ஆனால், தற்போது நாட்டின் பாதுகாப்பு மிகவும் ஆபத்தான கட்டத்திலுள்ளது.

பிரதமர் ரணிலுக்கு பொதுமக்கள் வழங்கிய ஆணையை அவர் நிறைவேற்றவில்லை. எனவே, நாட்டின் பாதுகாப்புக் கருதி - பொறுப்புணர்வுடன் நான் தலையிட்டேன்.

சமாதானப் பேச்சுவார்த்தை ஆபத்தான கட்டத்துக்குச் சென்றுள்ளதாக கூறப்படுவதை நான் நிராகரிக்கின்றேன்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த படைத்தரப்பினர் சரியாகச் செயற்படவேண்டுமென அவர்களுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

சமாதானப் பேச்சுவார்த்தை என்னாலேயே தொடக்கிவைக்கப்பட்டது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக தற்போதைய நிலை மாறியுள்ளது. நாங்கள் ஒருவருக்கும் பொய் சொல்லவேண்டிய தேவையில்லை- விடுதலைப் புலிகளுக்குக்கூடத்தான். அரசியலமைப்புக்கு அப்பால் எக்காரணம் கொண்டும் இனப்பிரச்சினையைத் தீர்க்கமுடியாது.

என்மீது அபாண்டமாக தேவையில்லாமல் பழி சுமத்தப்பட்டமையினாலேயே, நான் ஊடகத்துறை அமைச்சை எடுத்துக் கொண்டேன். சுமார் 630 இற்கும் மேற்பட்ட தடவை தேவையில்லாமல் என்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதில் எட்டுக்கும் மேற்பட்ட விடயங்களை என்னால் சுட்டிக்காட்டமுடியும்.

பாதுகாப்பு அமைச்சை பொறுப்பெடுத்த பின், எனது பாதுகாப்புக்கு மிகுந்த அச்சுறுத்தல் விடுதலைப் புலிகளாலும், மற்றையவர்களாலும் ஏற்பட்டுள்ளது. நான் நாட்டின் தலைவியாக மிகவும் துன்பத்துடனே செயற்படுகின்றேன்.

அது மிகவும் சுலபமானதல்ல. நான் இரண்டுமுறை குண்டு வெடிப்புத் தாக்குதலுக்கு முகங்கொடுத்திருக்கின்றேன். நான் அதற்கு முகங்கொடுக்கத் தயாராகவே உள்ளேன். எதற்கும் நான் பயப்படவில்லை. எனது கடமையை முழு மனதுடன்தான் இந்த நாட்டுக்காக நான் செய்து வருகின்றேன் எனவும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

## அரசியல் குழப்பங்களால் ஜப்பான் சிறுவர்கள் வருகை ரத்து

ஆசிய பிராந்திய சிறுவர் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் இலங்கையில் கல்வி பயில்வதற்காக அனுப்பப்படும் ஜப்பானியச் சிறுவர்கள் இந்த வருடத்தில் இனி வரும் மாதங்களில் வரமாட்டார்கள் என ஜப்பானிய அரசு அறிவித்துள்ளது.

இலங்கையின் கல்வி அமைச்சுக்கு இது தொடர்பாக அறிவித்துள்ள ஜப்பான் அரசு, மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி கையேற்ற பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலையை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக இலங்கை வந்த ஜப்பானியச் சிறுவர்கள் வடக்கு - கிழக்கு தமிழ் முஸ்லிம் சிறுவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

எனவே, ஜப்பான் அரசின் முடிவின்படி இந்த வருடத்தில் ஜப்பான் சிறுவர்களும் இங்கு வரமாட்டார்கள். அதேபோல் இலங்கைச் சிறுவர்களும் ஜப்பானுக்குச் செல்லமுடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

## பாதுகாப்பு அமைச்சை மீள ஒப்படைத்தால் சமாதானப் பேச்சுக்களைத் தொடரமுடியும்!

### தமிழ்த் தேசிய கூட்டமைப்பு செயலாளர் இரா.சம்பந்தன்

'ஜனாதிபதி பொறுப்பேற்ற பாதுகாப்பு அமைச்சை மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திடம் கையளிக்கவேண்டும். இதன்பின்னரே அரசாங்கத்தினால் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கமுடியும்'.

இவ்வாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் இரா.சம்பந்தன் நேற்றுமுன்தினம் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கும் -அரசாங்கத்துக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களில் நடுநிலைமையாளராக இருந்த நோர்வே விலகியுள்ளமை, சமாதானப் பேச்சுக்களை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு தடையாக உள்ளது.

எனவே, அரசாங்கத்திடமிருந்து பறித்தெடுக்கப்பட்ட அமைச்சுக்களை மீண்டும் அவர்களிடம் கையளிப்பதன்மூலம் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்கமுடியும். எனவே, மேற்படி அமைச்சுக்களை ஜனாதிபதியும் பிரதமரும் சந்தித்து, சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து பேச்சுக்களை நடத்தவேண்டும்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்தியா முன்வரவேண்டும். அதனை தாம் வரவேற்பதாக சம்பந்தன் மேலும் தெரிவித்தார்.

## நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த தேசிய இணக்கப்பாடு அவசியம்!

### கரு ஜெயசூரிய தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் சமாதானத்தை நிரந்தரமாக நிலைநாட்டுவதற்கு தேசிய இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்துவது அவசியமாகும்.

இவ்வாறு ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவிததார்.

நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு - சமாதான முயற்சிகளை நிரந்தரமாக நிலைநாட்டவும், தேசிய ரீதியிலான இணக்கப்பாடு அவசியம்.

இவ்வாறான தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்த ஐ.தே.கட்சி நடவடிக்கை எடுத்துவருகிறது. தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்திய பின்னரே, தேசிய அரசாங்கம் அமைபபது தொடர்பாக கவனம் செலுத்தப்படும். பொருளாதாரம், கல்வி, பாதுகாப்பு மற்றும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடல் என்பனவற்றிலும் இணக்கப்பாடு ஏற்படவேண்டுமென கரு ஜெயசூரிய வலியுறுத்தினார்.

## தேசிய அரசு மூலம் சமாதான முயற்சிக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்கும்!

### அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



சகல அரசியல் கட்சிகளும் அங்கம் வகிக்கும் தேசிய அரசாங்கம் ஒன்றை ஜனாதிபதி அமைத்து, சமாதான முயற்சியை ஆரம்பித்தால், அதற்குத் தனது கட்சியும் ஆதரவு வழங்குமென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஆனால், நாடாளுமன்றில் தேசிய அரசாங்கம் மூலம் சிறுபான்மைக் கட்சிகளைப் பலவீனப்படுத்தினால் அதற்குதான் ஆதரவளிக்கப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இரண்டு கட்சிகளும் சேர்ந்து தற்போதய அரசியல் நெருக்கடி நிலையை பேசித்தீர்க்க வேண்டுமெனவும் இது நாட்டிற்கு அவசியமாகத் தேவைப்படுவதெனவும் தெரிவித்த அவர் இந்தக் கலந்துரையாடலுக்கு அனுசரணையாக இந்தியாவை அழைக்கலாம் எனவும் தெரிவித்தார்.

## தப்பியோடிய படையினருக்காக தனியான அலுவலகம் திறப்பு

### ஆட்சேர்ப்புப் பணிப்பாளர் தகவல்

(கொழும்பு)

படையிலிருந்து தப்பியோடியவர்கள் தொடர்பான விபரங்களைக் கவனிப்பதற்கும், நிர்வாகச் சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்வதற்குமாக கொழும்பு மலே வீதியில் அமைந்துள்ள படைமுகாமில் புதிய அலுவலகம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக இராணுவ ஆட்சேர்ப்பு பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ஜவன தஸநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- படைமுகாமிலிருந்து தப்பியோடியவர்களை, படையிலிருந்து நீக்குவதற்கான முதற்கட்ட நடவடிக்கை அண்மையில் கம்பஹாவில் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. எம்மால் இதுவரை 727 தப்பியோடிய படையினருக்கான விலகல் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தில் எமது முதலாவது நடவடிக்கை நடந்தபோது, படையிலிருந்து தப்பியோடிய சுமார் 2000 இற்கும் மேற்பட்டோர் விலகல் சான்றிதழ்களைப் பெற விண்ணப்பித்திருந்தார்கள். ஆனால், நாம் எதிர்பார்க்காத அளவில் இவ்விண்ணப்பங்கள் இருந்ததால் எமக்கு அங்கு நிர்வாகச் சிக்கல்கள் எழுந்தன. பெரும்பாலான படையினர் கம்பஹா மாவட்டத்திலிருந்து தப்பியோடி இருந்தமையால் அவர்களது பிரத்தியேக கோவைகளை கண்டுபிடிப்பதற்கு முடியாமலிருந்தது.

இவ்வாறு தப்பியோடிய படையினரின் பிரத்தியேக கோவைகளைக் கண்டுபிடிக்க முடியாமைக் கான காரணம் அவர்களது விலாசமுமாகும். ஏனெனில், தப்பியோடியவர்கள் படையில் சேரும்போது தமது சொந்த முகவரியைத் தருகின்றார்கள். பின்னர் படைத்தலைமைப் பீடத்திற்கு எவ்வித தகவலும் தராமல் தமது விலாசத்தை மாற்றிக் கொள்கிறார்கள். சுமார் 5000 இற்கும் மேற்பட்ட தப்பியோடிய படையினர் கம்பஹா மாவட்டத்தில் உள்ளனர்.

இவ்வாறான சிக்கல்களைத் தீர்ப்பதற்காகவே படைத்தலைமையகத்தால் மலே வீதியில் அலுவலகமொன்று திறக்கப்பட்டுள்ளது. எனவே, தப்பியோடிய படையினர் தங்களது விபரங்களை இந்த அலுவலகத்திற்குத் தெரிவிக்கமுடியும்.

எமது அடுத்தகட்ட நடவடிக்கையாக அடுத்த ஜனவரி நடுப்பகுதியில் களுத்துறை மாவட்டத்திலிருந்து தப்பியோடிய 300 பேருக்கு விலகல் சான்றிதழ் கொடுக்கவுள்ளோம். இதில் சில தப்பியோடிய படையினர் குற்றச் செயல்களிலும் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் ஜவன் தஸநாயக்க.

## சுற்றுலாப் பயணிகள் வரவை அதிகரிக்க கடல் விமானப் போக்குவரத்து ஆரம்பம்!

(கொழும்பு)

சுற்றுலாப்பயணிகளின் வசதிகளை அதிகரித்து வெளிநாட்டவர்களைக் கூடுதலாக இலங்கைக்கு அழைத்துவரும் நோக்கில் கடல் விமானப்போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

கட்டுநாயக்காவிலிருந்து சுற்றுலாத் தலங்களுக்கான கடல் விமானப் போக்குவரத்துக்களை நடத்தும் திட்டத்தின் ஆரம்ப வைபவம் கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்றது.

கட்டுநாயக்காவில் இருந்து புறப்பட்ட கடல் வீமானம் ராஜவெலவில் உள்ள விக்ரோரியா ஏரியில் பெருமளவிலான மக்கள் குழுமி நின்று வரவேற்க தரையிறங்கியது.

இது ஒரு பரீட்சார்த்த நடவடிக்கையே என்று சிறிலங்கன் எயர் லைன்ஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. ராஜவெலவில் உள்ள விக்ரோரியா ஏரியிலிருந்து நுவரெலியா கிறகயா ஏரிக்கு கடல் விமானப் போக்குவரத்து நடைபெறவுள்ளது.

## இலங்கைத் தமிழ் அகதிகளை இந்திய அரசு தண்டிக்கக்கூடாது

### சென்னை நீதிமன்று உத்தரவு

(சென்னை)

தமிழகத்தில் சிறப்பு அகதிகள் முகாமில் உள்ள இலங்கைத்தமிழ் அகதிகள் விடயத்தில், அவர்களைச் சீர்திருத்தும் நோக்குடன் அரசு செயற்பட வேண்டுமேயன்றி தண்டிக்கும் நோக்குடன் செயற்படக் கூடாதென்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஹேமாவதி என்ற இராசாத்தி என்பவர் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் இருந்து மனுச்செய்த வழக்குகளை இரண்டு நீதிபதிகள் கொண்ட குழு விசாரித்து இவ்வாறு கூறியுள்ளது.

இந்தச் சிறப்பு முகாமிலுள்ள மனுதாரர் விடுவிக்கப்படவேண்டுமென்று நீதிமன்றிடம் மனுச்செய்திருந்தார்கள்.

தங்களைச் சிறப்பு முகாமில் வைத்திருப்பது தடுப்புக்காவல் போன்றது என்றும், இந்த முகாம்களில் மனித உரிமை மீறல் நடக்கிறது என்றும், முகாம்களின் வாழ்க்கை நிலை படுமோசமாக இருக்கிறது என்றும் அவர்கள் மனுக்களில் குறிப்பிட்டிருந்தார்கள்.

நீதிமன்றம் அவர்களின் மனுக்களை நிராகரித்ததென்றாலும் அகதிகளின் வழக்குகள் ஆண்டுக்கு இரண்டுமுறை தனித்தனியாக மறுபரிசீலனை செய்யபட வேண்டுமென்றும், வாரம் ஒருமுறையாவது அவர்கள் வெளியே சென்றுவர அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் உறவினர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

## பொங்கு தமிழ் ஒளிப்பேழையைப் பார்வையிட்ட ஆசிரியர், மாணவர்களை படையினர் எச்சரிப்பு

(வவுனியா)

வவுனியாவில் பொங்கு தமிழ் நிகழ்வின்போது ஒளிப்பதிவு செய்யப்பட்ட ஒளிப்பேழையைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த மாணவர்கள், ஆசிரியர்கள் படையினரால் எச்சரிக்கப்பட்டனர். நேற்றுமுன்தினம் வவுனியா - காமினி வித்தியாலயத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

வவுனியாவில் நடத்தப்பட்ட பொங்கு தமிழ் நிகழ்வு ஒளிப்பதிவு செய்யப்பட்டு, பாடசாலை மாணவர்கள் தமது பாடசாலைகளில் வைத்து பார்வையிட்டு வருகின்றனர்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் மேற்படி பாடசாலையில் - மாணவர்களும், ஆசிரியர்களும் ஒளிப்பேழையை பார்த்துக்கொண்டிருந்தவேளை, அங்கு வந்திருந்த படையினர், ஒளிப்பேழையைப் பார்க்க வேண்டாம் எனவும், இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்துச் சென்றுள்ளனர்.



எழுவைதீவில் நடைபெற்ற கால்நடை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கான விசேட கூட்டத்தில் - கால்நடை வைத்திய அதிகாரி யூலினா பிரான்ஸிஸ் உரையாற்றுவதனையும், ஊர்காவற்றுறை கால்நடை அபிவிருத்திச் சங்கத் தலைவர், செயலாளர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

# மாணவர்கள் சுதந்திரமாகக் கற்க படையினர் தொடர்ந்தும் இடையூறு!

## வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் அறிக்கை

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முரணான வகையில், இராணுவத்தினர் மாணவரது கல்விசார் நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்தும் இடையூறு ஏற்படுத்தி வருகின்றனர் என, வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியின் மாணவர் ஒன்றியத்தால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தற்போதுள்ள சமாதான நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, மாணவர்கள் பாடசாலைக் கல்வியைச் சுதந்திரமானமுறையில் தொடர அனுமதிக்கவேண்டும். பாடசாலைகள் பல, இராணுவத்தினரது உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளுள் அமைந்துள்ளன. இதனால், மாணவர்கள் கல்வியைத் தொடரமுடியாதுள்ளது.

பாடசாலையிலும், அதற்கு அண்மையாகவும் இராணுவத்தினர் காவலரண்களை அமைத்து, மாணவர்களது சுதந்திரமான கல்வி நடவடிக்கைக்கு அச்சுறுத்தல் தரும் வகையில் ஈடுபட்டு வருகின்றனர். இவை புரிந்துணர்வு நடவடிக்கைக்கு முரணானது. இந்தநிலையில் மாணவர்களாகிய நாம் - எமது உரிமைகளையும், பாதுகாப்பினையும் கருத்திற்கொண்டு, எமது எதிர்ப்பினைப் பொதுநிகழ்வுகள் மூலம் தெரியப்படுத்தி வருகின்றோம்.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முரணான வகையில் இராணுவத்தினர் - மாணவர்களின் கல்விசார் நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்தும் இடையூறு ஏற்படுத்தி வருகின்றனர். இந்தநிலைமை மாறி, இயல்புநிலையில் மாணவர்கள் கல்வி கற்பதற்கு இராணுவத்தினர் இடையூறாக இருப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்பதுடன், இவ்வாறான நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### திருவெம்பாவை பாடல் புத்தகம் அன்பளிப்பு

எதிர்வரும் திருவெம்பாவை தினத்தை முன்னிட்டு - ஆலயங்கள், இந்து இளைஞர் மன்றங்கள், பாடசாலைகளுக்கும் - "திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி" பாடல புத்தகத்தை "மில்க்வைற் சோப்" தொழிலகத்தில் அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளலாமெனத் தொழிலதிபர் இ.தவகோபால் அறிவித்துள்ளார்.

## சமுர்த்தி கருத்திட்டப் பணிகளுக்கு சுமார் 4 இலட்சம் ரூபா ஒதுக்கீடு

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில், இலங்கை சமுர்த்தி அதிகாரசபையினால் 4 இலட்சத்து 37 ஆயிரத்து 500 ரூபா கருத்திட்டப்பணிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மக்களின் அன்றாடப் பாவனையிலுள்ள வீதிப் புனரமைப்பும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மக்கள் பாவனையிலுள்ள மந்திப்புலம் - பிடாரி கோவிலடி வீதி, நல்லூர், கந்தர்மடம் - பழம் வீதியின் குறுக்கு வீதி, திருநெல்வேலி - கலாசாலை வீதியின் குறுக்கு வீதி என்பவற்றின் புனரமைப்பிற்கு ஒரு இலட்சத்து 87 ஆயிரத்து 500 ரூபாவும், சமுர்த்தி சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தில் நான்கு பயனாளிகளுக்கான நடமாடும் வண்டில் மற்றும் ஐந்து பயனாளிகளுக்கான வீட்டு விற்பனை நிலையத்திற்கான உபகரணக்கொள்வனவுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும்,

சமுர்த்தி விவசாய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் - ஐந்து பயனாளிகளுக்கு விவசாய உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை, இந்தப் பிரதேச செயலர் பிரிவில் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மக்களின் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கில், மூன்று சமுர்த்தி வங்கிகள் திறக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். (57)

## தென்னிலங்கை சர்வமதக் குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு வருகைதரவுள்ளனர்

தென்னிலங்கையைச் சேர்ந்த சர்வமதக் குழுவினர் - இரு நாள் விஜயமாக எதிர்வரும் 21 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளனர். கண்டியிலுள்ள செற்றிக் நிறுவனத்தின் ஊடாக வருகைதரும் இந்தக் குழுவினர், கியூடெக் நிறுவனத்தில் தங்கி நின்று தமது செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்து, கிறிஸ்தவம், இஸ்லாமிய, பௌத்த மதங்களை உள்ளடக்கிய 15 பேர் கொண்ட குழுவினர், யாழ்ப்பாணத்திலுள்ள நலன்புரி நிலையங்களுக்குச் சென்று, அங்குள்ள நிலைமைகளை ஆராய்வதுடன், உயர் பாதுகாப்பு வலயங்களைப் பார்வையிடவுள்ளனர். மறுநாள் சனிக்கிழமை தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறையினரையும் சந்திக்கவுள்ளனர். இரு நாட்கள் விஜயத்தின் போது, யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் சென்று, இன்றைய நிலைமைகள் பற்றி இவர்கள் ஆராயவுள்ளனர். (91)

## உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடாத்திய போட்டிகளின் முடிவுகள்

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் பாலர் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட - பேச்சு, மனனம், படம்தெரிவு, திருமுறை ஓதல போட்டிகளில் - வெற்றி பெற்றவர்களின் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

"ஏ" பிரிவு பேச்சு - த.பவதாரணி, சி.திலக்சிகா, ப.ஆரணி.
திருமுறைஓதல் - ச.சக்திதாரணி, த.பவதாரணி, செ.புவிதாயினி.
திருக்குறள் மனனம் - ச.சக்திதாரணி, தே.சாருஜன், யோ.வசீகரன்.
"பி".பிரிவு - ஆத்திசூடி - ரா.ஷயந்தன், க.லதாங்கி, வி. சஜித்தா.
படம் தெரிவு - தி.துவாரகன், க.லதாங்கி, பா. கிசாந்தி.
திருமறை ஓதல் - தி.துவாரகன், ரா.ஷயந்தன், அ.டிவேந்தன். (101)

## சின்னஞ்சிறு செய்திகள்

### வீதி விளக்குகள் ஒளிர்வதில்லை

வீதிவிளக்குள் இரவுவேளைகளில் ஒளிராததால் - பழைய பூங்கா வீதி, ஈச்சமோட்டை வீதி, மற்றும் அதனை அண்டியசூழலும் இருளில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது மழைக்காலமாகையால் - மாலைவேளைகளில் இருளத் தொடங்கிவிடுகிறது. இந்த நிலையில், பழையபூங்கா வீதி, ஈச்சமோட்டை பகுதியில் பொருத்தப்பட்டுள்ள மின் குமிழ்கள் ஒளிராததால், அப்பகுதிமுன்னிரவு வேளைகளில் இருள் சூழ்ந்துவிடுகிறது. இதனால், பொதுமக்கள் வீதியால் செல்லச் சிரமப்படுகிறார்கள். (119)

### சாதாரண தர பரீட்சை அலுவலர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாண வலயம் II இற்கு உட்பட்ட வலிகாமம், வடமராட்சி வலயக் கல்வி அலுவலகங்களுக்கும், கோப்பாய், கோட்டக்கல்வி அலுவலத்திற்கும் உட்பட்ட பரீட்சை மேற்பார்வையாளர்கள், உதவிப் பரீட்சை மேற்பார்வையாளர்கள், இணைப்பு அலுவலர்கள், உதவி இணைப்பு அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் - நாளைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் நாளை காலை 8.30 மணிக்கு யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

### நெடுந்தீவு மேற்கு வீதிகள் திருத்தம்

பின்தங்கிய கிராம அபிவிருத்திக்கெனக் குறித்து ஒதுக்கப்பட்ட நிதி மூலம் - நெடுந்தீவு மேற்கு குருக்கள் மடம், கோட்டைக்காடு வீதி திருத்தப்படுகிறது. சுமார் 4 லட்சம் ரூபா செலவில் இத்திருத்த வேலை இடம்பெறுவதுடன், நீண்டகாலமாக இந்த வீதி செப்பனிடப்படாமல் இருந்தமையும், அதனை அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியமையும் குறிப்பிடத்தக்கது. (113)

### செல்வச் சந்நிதிக்கு புதிய சித்திரத் தேர்

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சினால், செல்வச் சந்நிதி முருகன் ஆலய புதிய சித்திரத்தேர் நிர்மாண ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக நாளை மறுதினம் புதன்கிழமை காலை 7 மணிக்கு - பம்பலப்பட்டி மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில், அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவிருக்கும் புதிய சித்திர தேர் அங்குரார்ப்பண விழாவிற்கு, செல்வச்சந்நிதி ஆலய பூசகர்கள், நிர்வாக சபையினர், பக்தர்கள் சமுகமளிக்கவுள்ளனர். 1990 ஆம் ஆண்டு இராணுவத் தாக்குதல்களினால் அழிக்கப்பட்ட சித்திரத்தேரிற்குப் பதிலாகவே, தற்போது புதிய சித்திரத்தேர் நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சைவபரிபாலனசபை புதிய நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் 93 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டமும், நிர்வாகசபை உறுப்பினர் தெரிவும் அண்மையில் இடம்பெற்றது.

புதிய நிர்வாக சபையின் தலைவராக - சைவப்புலவர் வ.கந்தசாமியும், உபதலைவர்களாக - இ.குகதாசன், செல்லத்துரை ஆகியோரும், செயலாளராக - மு.திருஞானசம்பந்த பிள்ளையும் உபசெயலாளராக - தி.மாணிக்கவாசகரும், பொருளாளராக வி.தயாபரனும், மேலதிக உதவிச் செயலாளராக - சி.தவகோபாலனும், பரீட்சைச் செயலாளராக - வ.கந்தசாமி மற்றும் சமய பிரசார அமைச்சராக அ.பஞ்சாட்சரம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### மாவீரர்தின நிகழ்விற்கு வர்த்தக சங்கம் ஒத்துழைப்பு

தமிழ் மக்களின் நீண்டகால அபிலாசைகளை நிறைவு செய்வதற்கு, தங்களின் இன்னுயிரை தற்கொடையாக ஈந்த மாவீரர்கள் என்றும் மரணிப்பதில்லை.

அவர்களின் தியாகத்தை நினைவு கூரும் மாவீரர் தினத்தையொட்டி - 21.11.2003 தொடக்கம் 27.11.2003 வரை நடைபெறும் நிகழ்வுகள் எழுச்சியாக நடைபெறுவதற்குச் சகல வர்த்தக சங்கங்களும், சகல வர்த்தகர் சங்கங்களைச் சேர்ந்த வர்த்தகப் பெருமக்களும் - தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் கேட்டுக்கொள்கின்றது.

## வாழ்க வளமுடன்

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### முதலாவது அகவையில்



பெயர் : அ. சர்மிலன்
முகவரி : 49/4 வில்வந்தெரு, கொழும்புத்துறை.



பெயர் : கு.தேனுஜன்
முகவரி : சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில்.

### இரண்டாவது அகவையில்



பெயர் : ந. அஜித்தன்
முகவரி : திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி.

### மூன்றாவது அகவையில்



பெயர் : சே.பானுஜன்
முகவரி : நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

### ஏழாவது அகவையில்



பெயர் : க. கிறெளதர்
முகவரி : 71 ஏ , டேவிற்றோட், குருநகர்.



பெயர் : கா.கம்சாயினி
முகவரி : 406, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

### பத்தாவது அகவையில்



பெயர் : வ.ஆதவிருட்சன்
முகவரி : ஆறுமுகம் வீதி, கந்தரோடை.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------
முகவரி :------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றோர் ஒப்பம்

இலக்கியச்சோலை

# தழும்புகள்

கருவானம் வெண்மைக்கு நிறம் மாறிக்கொண்டிருந்தது. வகுப்பிற்குள்ளே புகுந்த ரதீஸ் ஒருகணம் திகைத்து நின்றான். 'சேர் வந்திட்டார். இனி ஒண்டும் செய்யேலாது'. இது அவனின் நெஞ்சுப் படபடப்பிற்கு சுதி சேர்த்துக் கொண்டிருந்தது. 'சீ இவ்வளவு வேகமாய் ஓடி ஓடி வந்தும், நேரம் போட்டுது இனி என்ன செய்யிறது. பெடியளும் சிரிக்கப் போறாங்கள். ஒவ்வொருநாளும் நீ லேற்றானே எண்டு...' எண்ணியவன் மனதிலிருந்து கனதியான மூச்சொன்று அவனை அறியாமலே வெளிக்கிளம்பியது.

'இனி என்ன சொல்லியும் என்ன? எங்கடை சம்பந்தன் சேரிடைத் தப்பவே ஏலாது' என்று சலித்துக் கொண்டான் ரதீஸ்.

பாலவடியும் களங்கமற்ற கருணைமுகம், நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும்கொண்ட மாணவன் தான் இவன. எனினும், இதையெல்லாம் ஆசிரியர் கருத்திலெடுப்பதே கிடையாது. அவர் ஆண்டவனைத் தொழுவதைவிட, ஆண்டவன் தந்த கடமையை நீ சரிவரச்செய். ஆண்டவன் உன்னிடமே வந்துவிடுவான் என்ற கொள்கையும், அசையாத சிந்தனையும் கொண்டவரல்லவா. இதனால் வருத்தப்பட்டபடி ஒருவாறு வகுப்பறைக்குள் செல்ல எத்தனித்தான் ரதீஸ்.

'சேர் எக்ஸ்கியூஸ் மி" என மெதுவாகத் தன் உதடுகளுக்குள் சொன்னவன், நடுநடுங்கியபடி வகுப்பறைக்குள் சென்று மெதுவாக அமர்ந்து கொண்டான். ஆனாலும் ஆசிரியர்களுக்குத்தான், கண்கள் கழுகுக் கண்களாச்சே. ஆசிரியர் டாப் மாக் பண்ணுறார் என்ற நினைப்பில், உள்ளே புகுந்தவனை ஆசிரியர் காணாமல் இருக்கமுடியுமா? இதற்கும் அப்பால், ஆசிரியர் கையிலிருந்த வெள்ளைப் பிரம்பு அவனை வேண்டுமென்றே ஏறெடுத்துப் பார்ப்பதுபோல் இருந்தது.

"டேய் ரதீஸ்"

"ஓம் சேர்" நாக்குத் தளதளக்கப் பதில் கூறினான்.

"இதில் ஒருத்தன் இருக்கிறன் எண்டுகூடத் தெரியேல்லையோ உனக்கு. இஞ்சால வா! இஞ்சால வா! கெதியாய். இது ஆசிரியர் உச்சஸ்தாயியில் இட்டகட்டளை. மெதுவாக எழுந்து பயந்து பயந்து போய்...

'இல்லை சேர். நான்... நான்.. எக்ஸ்கியூஸ்மி சொல்லிப் போட்டுத்தான் சேர் போய் இருந்தனான்'.

"டேய், நான் அனுமதிச்சனானே. உன்னை இருக்கச் சொல்லி"

'இல்லை சேர் இல்லை'

"எத்தினை மணிக்கடா ஸ்கூல் ஸ்ராட் பண்ணுறது"

'ஸ்கூல் சேர்.. எட்டரை மணிக்கு ஸ்ராட் பண்ணுறது"

"அப்ப நீ எத்தனை மணிக்கு வந்திருக்கிறாய் "

"இல்லை சேர் நான்... நான்...' என்று தடுமாறினான் ரதீஸ்.

'டேய் நீ என்ன வீட்டுக்கு உழைச்சுக் குடுக்கிறனியே. நேரம் போச்சு எண்டு சொல்லுறதுக்கு. காலமை எழும்ப எட்டுமணி ஆகும். பிறகு எப்படியடா எட்டரைக்கு வாறது'

ரதீஸுக்கு ஆசிரியர் சொன்னகூற்று ஈட்டியாய் குத்தியது போலவும், சிந்திக்கும்போது தேன்பருகுவது போலவும் இருந்தது. என்ன செய்வது? அவனால் சகிப்பைத் தவிர வேறு எதையுமே செய்யமுடியவில்லை.

'நீட்டடா கையை...' என்ற ஆசிரியரின் வெள்ளைப் பிரம்பு நொந்து இளைத்துப் போயிருந்த பிஞ்சுக் கரத்தை மேலும் புண்படுத்தியது. அடியை வேண்டியவன் அப்பாடா ஏதோ இப்படித் தினமும் நொந்துபோகும் கைக்கு இங்கும் நோவா? என நொந்தபடி, அடிவாங்கியாவது வகுப்பில் இருக்கலாம் என்ற சின்ன நிம்மதியோடு புத்தகப்பையைக் கழற்றி வைத்து, புத்தகத்தை எடுக்க ஆரம்பித்தான்.

அதற்கிடையில் 'ரதீஸ் வாடா இஞ்சை' ஆசிரியர் ஒருபடி உச்சஸ்தாயியில் அழைத்தார். அந்த அழைப்பாணை மட்டும் அவன் நெஞ்சை நொருக்குவதாய் உணர்ந்த ரதீஸ் மெல்ல அடி எடுத்து வைத்தான்.

'ஏன் நேற்று வரயில்லை. எங்கை உலாத்துக்குப் போனனி. சொல்லடா கெதியில. இல்லையெண்டால்...' இழுத்தார் ஆசிரியர். மீண்டும் ஒரு பாசுபதாஸ்திரம் தன்னைப் பதம் பார்க்கும் என அவன் சற்றும் எண்ணிப் பார்க்கவே இல்லை. ஏன்? எண்ணக் கூடிய நிலையிலும் இல்லை.

'நான் சேர் நேற்று பத்திரகாளி கோயிலுக்கு போனனான்'

'எடை தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி கோயிலுக்குப் போனனியே. அது சரி நீ அங்கை ஏன் போனனி?'

'காவடி சேர். அதான் பாக்கிறதுக்கு...' பயந்தபடி பதிலளித்தான்.

'டேய் காவடி இரவெல்லோ. உனக்குப் பகலும் காவடி ஆர் ஆடினது?'

'இல்லை சேர்...'

'டேய் நீங்கள் வீட்டுக்காரையும் பேக்காட்டி, எங்களையும் பேக்காட்டி, நாளைக்கு, உலகத்தையும் பேக்காட்டப் போறியள். படிக்க விருபபமில்லாட்டி, வீட்டைபோய் எங்களையும் பேக்காட்டாமல், உங்களை - நீங்களே பேக்காட்டாமல், வீட்டுக்காரரையும் பேக்காட்டாமல், எனக்குப் படிக்க ஏலாது எண்டு சொல்லிப்போட்டு வீட்டை நில்லுங்கோவன். ஏன் வீணாய் வாறியள்' ஆசிரியர் பொரிந்து தள்ளினார்.

இப்படி ஆசிரியர் கூறியது மட்டும் ரதீஸைத் 'திக்' என வைத்தது. ஒருகணம் சிலையாக நின்றவன் மனத்தில், தாய் கூறிய கூற்று நிழலாய் வலம்வந்தது.

'தம்பி, எனக்கு அஞ்சு பொம்பிளைப் பிள்ளையள். நீதான் மூத்தபிள்ளை, இனியும் நீ எப்பிடிப் படிக்கிறது, அப்பா ஏலக்கூடிய ஆள் எண்டாலும் காரியமில்லை, ஏதோ ந யோசிச்சுச் செய், என்னால் படிப்புக்கு உனக்கோ, தங்கச்சிமாருக்கோ, காசுதர ஏலாது, நீ விரும்பினால் உன்ரை செலவை நீயே பார்த்துப் படிக்கில்படி. ஆனால் இடைசுகம் ஏதோ சாப்பாட்டுக்கு அஞ்சைப் பத்தைத் தந்தாத்தான் நல்லது. என்ரை கூலிவேலைக்காசு மூவாயிரம் என்னெண்டு காணும். எதுக்கும் நீ இனிப் படிக்கிறதெண்டால் ஏதோ நீயே யோசிச்சுமுடிவெடு, கடற்கரைக்குப் போய்வரவே ஒன்பதாகும் பேந்தெப்படி பள்ளிக்குப்போறது"

"டேய். என்ன யோசிக்கிறாய்? களவாய் சுத்தித்திரிஞ்சதுபிடிபட்டுப் போச்சுதெண்டே. வீட்டுக்காரரிட்டைக் காசு வேண்டுறது, அதுக்கு வேணும், இதுக்கு வேணும் எண்டு. பேந்து அதைக்கொண்டு ஜாலியா சுத்திறது. நீங்கள் தானேடா நாளைக்கு ரவுடியாய் றோட்டில நிக்கப்போற ஆக்கள்...' அசிரியர் விடாது பொழிந்து கொண்டே சென்றார்.

கையைல், அடிவிழுந்ததால் உண்டான தழும்புவலி, இத்தனைக்கும் அப்பால் உள்ளமும் ஒருபடி நோகவே செய்தது.

'சேர்... நான் அப்பிடி இல்லை சேர்.. நான்...'

'டேய்... நீ எனக்குப் படிப்பிக்காதை. உன்னை மாதிரி எத்தினை பேரைக் கண்டவன் நான். அது சரி இந்த முறை உன்ரை தமிழ் மாக்ஸ் என்ன?'

'எண்பத்தி நாலு சேர்'

'ஆருக்கடா கயஸ்ற்'

'ரதீசுக்குத்தான் சேர்' இது மாணவர்களின் பதில்.

'டேய் உண்மையைச் சொல். பாத்தே எழுதினனி சோதினைக்கு'

'இல்லை சேர் இல்லை...' என்றான் உற்சாகத்தோடு.

'எடை மறந்தே போனன். நேற்றுத் தானே வரையில்லை. முந்தநாள் நான் தந்த வீட்டுவேலை லைபிறறியில பார்த்து தகவல் சேகரிச்சு எழுதச் சொன்ன 'நவீன தொடர்பு சாதனங்களின் விருத்தியும் பயன்பாடும்' என்ற கட்டுரை எழுதிட்டியோ? எங்கை பார்ப்பம்'

அப்பொழுதுதான் அவனுக்கு நினைவுக்கு வந்தது, லைபிறறியில சேகரித்த தகவல்களைப் பார்த்துவிட்டு, இரவு உறக்கத்திற்குச் சென்றது.

'இல்லைசேர்... இல்லை' தடுமாறினான்.

'டேய் கவனம்படிப்பில இருந்தாத்தானே. ஏதோ வீட்டுக்காரற்றை தெண்டிப்புக்குத்தானே வந்து பொழுதை மண்ணாக்கிறியள். போடா வெளியில. உன்னையெல்லாம் வகுப்பிலை வைச்சிருக்கிறதே பாவம்'

கடற்கரையில் வலை இழுத்து 8 மணிக்கு முடிய, சரியாகச் சாப்பிடக்கூட முடியாது, எதற்காக ஆவலாக அவசரமாக வந்தானோ அதுவே இப்பொழுது அவனை வரட்டுகிறது. மன உளைச்சலோடு.

'இல்லை சேர் இனி இல்லை...'

'போடா. கெதியாப் போ"

'சேர்.. சே...ர்...' எனப் பலபடி கெஞ்சிப் பார்த்தான். இரக்கம் காட்டுவதற்குப் பதிலாக, ஆசிரியரின் பிரம்பு ரதீசின் முதுகை இரு தடவைகள் 'பளீர் பளீர்' என முத்தமிட்டது.

'இல்லை சே...ர்... நான்... நான்... போறன் வெளில அடியாதேங்..கோ... சே... ர்' என்றவன் புத்தகப் பையைத் தூக்கினான். வெளியேற ஆயத்தமானான்.

அப்பொழுது ஆசிரியர் 'போடா... போய் அப்பாவைக் கூட்டிக்கொண்டுவா' என்றவர், நேராக அதிபரின் அறைக்குச் செல்ல எத்தனித்தார்.

'சேர்... சேர்...'

'என்ன?'

'அப்பா.. இல்லை ... சேர்'

'அப்பா இல்லையோடா?'

'இல்ல சேர்.. அப்பா...'

'இனி என்னோட கதைக்காதை. எனனால உன்னோட கதைக்க ஏலாது. வேணுமெண்டால், அதிபர் வருவார் அவரோடகதை' என்றவர் முட்டுக்காலில் நில்லு, என்றபடி அதிபரிடம் சென்றார்.

'என்னப்பு, ஏன் இதில இப்பிடி நிக்கிறீர்' இது ஒன்றுமே அறியாதவர் போல வினாவும் பாடசாலை அதிபரின் கூற்று'

'மிஸ் நான் நேற்று வரேல்லை. அதான் சேர் பிடிச்சு வெளியிலை விட்டிட்டார்'.

'ஆ.. அது சரி ஏன் நேற்று வராமல் விட்டனீர்?'

'மிஸ் நான் நேற்றிரவு நெல்லண்டைக்குக் காவடி பாக்கப் போனனான்'

'அப்ப பகல் ஏனப்பு வகுப்புக்கு வராமல் விடுவான்?'

'இல்லை மிஸ்...' என்று இழுத்தான் ரதீஸ்.

'என்ன சொல்ல வாறீர் பயப்பிடாமச் சொல்லும்'

'சேர் அப்பாவைக் கூட்டிவரட்டாம் அதான்...'

'ஒண்டும் செய்யேலாது அப்பு, நீர் அப்பாவைக் கூட்டி வாருமன். அப்பத்தானே அப்பாவும் உங்கடை சரி, பிழைகளை அறிஞ்சு கொள்ளலாம்'

'அதில்லை மிஸ். அப்பா...' என்றவன் கண்கள் கலங்கி அழத்தொடங்கினான்.

'என்னப்பு... அப்பா இல்லையோ... அல்லது...'

'இல்லை மிஸ் அப்பா இருக்கிறார். ஆனால் வரமாட்டார்.

'ஏன் என்ன பிரச்சனை? அப்பாவோட நீங்கள் கதைக்கிறதில்லையோ"

'இல்லை மிஸ் கதைக்கிறனாங்கள். ஆனால் அப்பா வரமாட்டார்."

"ஏனப்பு அப்பா வெளிநாட்டிலையோ?"

'இல்லை மிஸ், அப்பா வீட்டை தான் இருக்கிறார். ஆனால்... அப்பா... அப்பாவுக்கு சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையால இரண்டு காலும், வலது கையும் இல்லை. அதால எழும்பவே மாட்டார். நாங்கள்தான் எழுப்பி இருத்திறது கூட...' என்று அவன் கூறுவதைக்கேட்க, அதிபருக்கு ஒரு பக்கம் மனம் கவலையாகவும், மறுபக்கம் இது எவ்வளவு தூரம் உண்மை என்பதையும் நம்புவது மிகவும் சிரமமாகவும் இருந்தது.

இந்தக்காலப்பெடியள் இப்பிடிப் பலதைச் சொல்லித் தானே அனுதாபவாக்குப் பெற்றுவாழுறாங்கள். இந்தக் காலத்தில் எது உண்மை, எது பொய் எண்டு எண்ணிப் பார்க்க முடியாமக் கிடக்கு என, அதிபர்மனது உண்மைக்காய் பிரலாபித்தது.

'அப்ப சரி, ரதீஸ் உம்மடை வீடு எவடத்தில இருக்கு?

'தும்பளையில மிஸ்'

'தும்பளையில எவடத்தை?'

'தும்பளை சைவப்பிரகாச வித்தியாசாலைக்குப் போறதுக்கு முன்னுள்ளவீடு'

'அப்ப சரி, பிரச்சினையே இல்லை நானும் இப்ப பத்து மணிக்கு தும்பளைக்குப் போகவேணும். அங்கை சைவப் பிரகாச வித்தியாசாலையில் நடக்கிற பரிசளிப்பு விழாவுக்குப் அங்கை போகோணும். அதிருக்கட்டும், நீர் அம்மாவைக் கூட்டி வந்திருக்கலாமே.'

'அம்மா மிஸ் நாலு மணிக்குத்தான் வீட்டுக்குவருவா அவ கூலிவேலைக்குப் போறவா'

'அப்ப ரதீஸ் நீர் புத்தகப்பையை வகுப்பிலை வைச்சிட்டு, என்ரை ஆட்டோவில ஏறும்' மங்களாகத் தெரிந்த கல்வியின் ஒளிக்கீற்று சற்றுப் பிரகாசிப்பதாய் ரதீஸ் உணர்ந்தான்.

படலை இன்னும் நிலைத்து நிற்கிறதே தவிர, அந்த நிற்கும் காவோலைகளில் உயிர்ப்பே இல்லை. அவை உள்ளே நடமாடுவோரை வெளியே வேண்டுமென்றே காட்டுவது போல் காணப்பட்டன. அவை நீண்ட நாள் நின்றும், கறையானும், வெய்யிலும், மழையும் மாறிமாறிப்பதம் பார்த்தும் இன்னமும் அவைக்கு பென்சன் கொடுக்கப்படாததால், அவை மறைப்புத் தொழிலை மறந்து விறைத்து நிற்கின்றன. இதற்கும் அப்பால், ரதீசின் தந்தை தமிழ் வாணன் இருப்பதை அதிபர் - படலை திறந்துதான் பார்க்க வேண்டுமென்ற அவசியமே கிடையாது. ஆட்டோவில் இருக்கும்போதே தந்தையும், அவர்களது கொட்டில் வீடும் நன்றாய்த் தெரியுமே.

'ரதீஸ் எங்கை உங்கடை அப்பா...?'

'அப்பா, இதிலைதான் மிஸ் இருக்கிறவர். ஒருதரும் தூக்காமல் அரக்கமாட்டார். பாப்பம்... எங்கயோ தெரியேல்லை' அவன் தடுமாறினன். என்ன நடந்திருக்கும் என்பதை அவனால் இனம்காணமுடியவில்லை.

அதிபராலே தந்தை இருந்த அந்தஇடத்தை நன்றாக அடையாளம் காணமுடிந்தாலும், எங்கே அவரைக் காணவில்லை என்ற பதில் சலனமாகவேபட்டது.

குனிந்து வீட்டுக்குள் புகுந்த ரதீசின் தொண்டை அடைத்துக் கொண்டது. தந்தை தமிழ்வாணரா. இவர். அவனால் அதை நம்பவே முடியவில்லை. மிஸ் ஓடிவாங்கோ... ஓடிவாங்கோ' என்னப்பு... என்ன?

'அப்பா...' அவனால் உள்ளத்தில் தோன்றுவதை உதட்டுவழி வெளியிட முடியவில்லை. தொண்டை அடைத்துக்கொண்டது.

'அப்பு... ரதீஸ் கவலைப்படாதையும் நான்...' அதிபரின் குரல்நாண் எப்படி அடைபட்டதோ தெரியவில்லை. அதற்கு நிரந்தரமாய் பிராயச்சித்தம் பண்ணுவதுபோல, கண்ணீர் அதிபரின் கண்களை நிறைத்துக் கொண்டது. ரதீசின் கையைப் பற்றிய அதிபரால் எதையுமே கூறவோ, செய்யவோ முடியவில்லை.

ரதீசின் கண்களும் ஒருபடி கலங்கவே செய்தன. தமிழ்வாணன் தூங்கும்போது, அவர் நாக்கு மட்டும் பேசுவதாய் ரதீஸ் உணர்ந்தான். அது தன் இருப்பை திடப்படுத்திக் கொண்டது. ரதீசிற்கு அதிபரின் கண்ணீர் கலந்த கண்கள் ஏதோ கலங்கிய கண்களினூடு கதைகூறின. ☆



கோ.சுரேஸ்



## அழியாத சின்னம்

கால நகத்தின்
கோரப் பிராண்டலுக்கு
இளமையைப் பலிகொடுத்து
முதுமையை முதுகிலேற்றி
முன்னேறுகிறேன்
என்னூர் நோக்கி
எட்டத்தே
மொட்டையாய்த் தெரியும்
என் பனங்கூடல்களுக்குள்
என்றோ...
அச்சவாரம் முடித்த
கழுகுகளின்
எச்சங்கள்
மிச்சப்பட்டுக் கிடக்கின்றன.

ஆங்காங்கே
கொச்சைத் தமிழில்
"கட்டளை"ப் பலகைகளும்
எச்சிற்படுத்திய
எலும்புத் துண்டுகளும்
எனைப் பார்த்து
பல்லிளித்துக் கொள்கின்றன.

முற்றத்தில்
முல்லைக் கொடியொன்று
என்னினச் சோதரியின்
முதுகெலும்பைக் கொழுகொம்பாய்ச்
சுற்றிப் படர்கிறது...

உழுதுண்டு நாம் வாழ்ந்த
ஊரெல்லாம்
பழுதுண்டு போய்க்கிடக்க
எதிர்வீட்டு மதிலொன்றில்
இன்னமும் அழியாத சின்னமாய்
இரு அரசியற் கட்சிகளின்
"தேர்தல் விளம்பரங்கள்"
போர்புரிந்து கொள்கின்றன...
"புற அழகில்"

வளலாய் செல்வகுமார்



## எங்களை வாழவிடுங்கள்

நாங்கள் வாழப்பிறந்தவர்கள்...
எங்களை வாழ விடுங்கள்!

தாத்தா
கட்டிய ரோஜா வீட்டில்
குள்ள நரிகள்
கும்மாளமா...?

பாட்டி
நாட்டிய தென்னை மரங்கள்
பதுங்கு குழிக்கு
பக்க பலமா...?

அப்பா
அமைத்த சுற்று மதில்
மண்மூடை தாங்கும்
காவலரணா...?

அம்மா
ஆட்டிய ஆட்டுக்கல்
தடைக் கம்பியின்
பிற்பாரமா...?

அக்கா
நாட்டிய பூமரங்கள்
புத்தர் சிலைக்கு
புண்ணிய தானமா...?

அத்தான்
ஆக்கிய அலுமாரி
நீலப் புத்தக
சுமை வீடா...?

அண்ணா
நாட்டிய பழமரங்கள்
அடுப்பில் எரிக்கும்
விறகு தடியா...?

அண்ணி
பின்னைந்த பூச்சாடி
காவலரணின்
அழகுப் பண்டமா...?

தம்பி
வரைந்த சித்திரத்தாள்
அப்பக் கடையின்
சின்ன விறகா...?

தங்கை
படித்த புத்தகங்கள்
அப்பம் தாங்கும்
சின்னத்தட்டா...?

நாங்கள் வாழப் பிறந்தவர்கள்...
எங்களை வாழவிடுங்கள்!

கி.கமலதாஸ்

# கவிதைச் சோலை

## நூல் அகம்

## காலம் ஆகி வந்த கதை



'காலம் ஆகி வந்த கதை' என்ற பெயரில் சிறுகதைத் தொகுதியொன்று வெளிவந்துள்ளது. இந்தச் சிறுகதைகளை எழுதியவர் ரவி அருணாசலம் என்பவர். இவர் அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நாட்டுச் சூழ்நிலை காரணமாகப் புலம்பெயர் வாழ்க்கையைத் தொடர்பவர். புலம் பெயர்ந்து, வாழ்ந்த காலத்தில் எழுதப்பட்ட சிறுகதைகளாகவே இந்தத் தொகுதியில் உள்ள சிறுகதைகள் காணப்படுகின்றன.

ரவி அருணாசலத்தின் இந்தச் சிறுகதைத் தொகுதியினை, வன்னியில் உள்ள அந்திவானம் பதிப்பகம் அழகாக அச்சிட்டு வெளியிட்டுள்ளது.

'காலம் ஆகி வந்த கதை' சிறுகதைத் தொகுதியில் - இருபது கதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இந்த இருபது கதைகளும், இருநூற்றி நாற்பத்தேழு பக்கங்களை உடையதாகக் காணப்படுகின்றன.

இந்தத் தொகுதியில் உள்ள கதைகள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு விதமான செயதியைச் சொல்லி நிற்கின்றன. பொழுது போக்கிற்காக மட்டும் இவற்றை வாசித்துவிடமுடியாது.

'காலம் ஆகி வந்த கதை' என்ற இந்தச் சிறுகதையின் தலைப்புப் பற்றிச் சிறிது சிந்தித்தால் பல விடயங்கள் வெளிப்படும்.

அதாவது, இந்த நூல் வெளிவருவதற்குரிய காலம் இதுவாகையால், காலம் ஆகியமையால் வெளிவருகின்றது என்ற ஒரு பொருள் கிடைக்கப்பெறுகின்றது. கதைகளை எழுதுவதற்கு இதுவே காலமாக வந்ததால், எழுத்தாளரால் இக்கதைகள் எழுதப்பட்டு வெளிவந்துள்ளன என்ற கருத்தும், பெறப்படுகின்றது. எனினும் இந்தத் தொகுப்பில் உள்ள கதைகள் அனைத்தும், எமது வரலாற்றுத் தொடரின் ஒரு காலத்தைப் பிரதிபலிக்கின்றன எனலாம். இந்த நூலுக்கு முன்னுரை வழங்கிய பேராசிரியர் கா.சிவத்தம்பி 'காலம் ஆகி வந்த இந்தக் கதைகள் எனும் இந்தப் படைப்பு 20 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதிகளில் ஈழத்தமிழர்களுக்கு ஏற்பட்ட ஆழப்பதிந்த சமூக, அரசியல், பண்பாட்டு அனுபவங்களைக் கலைப் படைப்புக்களாக வெளிக்கொணரும் பிரக்ஞைபூர்வமான ஆக்க இலக்கியம், பயில்வில் ஒரு முக்கிய எட்டுகையை குறிக்கின்றது' எனக் குறிப்பிட்டுள்ளார்.

கதைகள் ஒவ்வொன்றிலுமே, எமது தமிழினம் சந்தித்த, வரலாற்றில் தடம்பதித்த, வீரம் செறிந்த நிகழ்வுகளும் துயரம் தோய்ந்த சம்பவங்களுமே நினைவு கூரப்பட்டுள்ளன. அவற்றை வாசிக்கும்போது, அந்த நிகழ்வுகளில் தோய்ந்தெழுந்த திருப்தி ஏற்படுகிறது.

யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்துள்ள அளவெட்டி எனப், பலராலும் அறியப்பட்ட கிராமத்தில் தான் வாழ்ந்த பழைய நினைவுகளை கதைகளின் கருக்களாக்கி, சுவையாகப் படைத்துள்ளார். ஒவ்வொரு கதையும் ஊர் நினைவுகளோடு ஆரம்பித்தாலும், முடிகின்றபோது தமிழினம் சுமந்த வடுக்களைத் தாங்கி கனத்த மனதை உருவாக்கியே நிறைவு பெறுகின்றன.

இற்றைக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர், எமது கிராமங்கள் தோய்ந்திருந்த பண்பாட்டு, சமூக, கலாசார, விழுமியங்களை நோக்கும்போது அந்த வேளைகளில் நாம் இல்லாதுபோனோமே எனும் சிறு ஏக்கம் நெஞ்சை நெருடவும் செய்கின்றது.

இந்தத் தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள கதைகளில் 'மண்ணின் வண்ணம்', 'காடுகள் சுடுகின்றன', காற்றிலும் வலியன் நீ' ஆகிய கதைகள் உணர்வுகளைத் தொடக் கூடியவைகளாக உள்ளன.

தமிழாராய்ச்சி மாநாட்டில் - தமிழினப் படுகொலைகளும், அவ்வவ்போது நடைபெற்ற இனக்கலவரங்களும், தமிழர்கள் கொலை செய்யப்பட்ட கொடூரமும் எவ்வளவிற்கு உணர்வுகளை உலுப்பக்கூடிய விதத்தில் எழுதப்படமுடியுமோ அந்தளவுக்கு எழுதப்பட்டுள்ளது.

எமது சமூகத்தில் அன்று புரையோடிப்போயிருந்த மூட நம்பிக்கைகளும் கதைகளின் இடையிடையே வந்துபோகின்றன. பேய், பிசாசுகள், கடவுளர் உலாப்போதல், இறந்த உறவினர்கள் ஆவியாய் உலாத்துதலும் ஆகியன கதைகளை ஆக்கிரமித்துள்ளன.

கதைகளை வாசிக்கும்போது, இன்று உயர் பாதுகாப்பு வலயம் என்னும் இரும்புப் பிடிக்குள் அகப்பட்டுள்ள எமது தாய் நிலத்தில் எல்லாம் புரண்டு எழுந்த திருப்தி ஏற்படுகிறது. கீரிமலை, பன்னாலை போன்ற இடங்களில், தான் வாழ்ந்த நினைவுகளை எழுதியுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

பள்ளிக்காலக் குறும்புத் தனங்களும், வாலிபப்பருவ சேட்டைகளும், நகைச்சுவை ததும்பக்கூடியதாக எழுதப்பட்டுள்ளன, அந்தக்கால ஆசிரியர்களைக்கூட அழகாக கண்முன் கொண்டுவந்திருக்கிறார் எழுத்தாளர் ரவி.

கோபம், தாபம், விசனம், நகைச்சுவை, வீரம், கருணை எனப் பல்வேறு உணர்வுகளின் பொக்கிஷமாகவே வெளிப்பட்டுள்ளது. 'காலம் ஆகி வந்த கதை'.

மொத்தத்தில் தரமான ஒரு எழுத்தாளனிடமிருந்து, வெளிப்பட்டுள்ள கனதியான படைப்பு இதுவாகும். என்று ஏதுவித தயக்கமுமின்றிக் கூறமுடிகின்றது.

இ.சர்வேஸ்

# கிழக்கும் மேற்கும்

## புலவர் தருமி – கவிஞர் பிர்தௌசி



சம்பகப் பெருமான்மேல் பக்தியில் மிக்க
புலவர் தருமி இறைவனின் திருமுன்
"மன்னவன் கருத்தினை அறிந்தொரு பாடலைத்
தந்தருள் செய்விரேல் பரிசா யெனக்கு
பொன்னும் கிடைக்குமென் ஏழ்மையு மகலும்"-
என்றுள்ளம் கசிந்திட இரந்து நின்றான்!
"கொங்குதேர் வாழ்க்கை" என்று தொடங்கும்
பாடலை தருமிக்குத் தந்தார் இறைவன்!
பாடலைப் புலவர்கள் கைகளிற் கொடுத்தான்!
தருமியின் பாடலிற் சொற்சுவை பொருட்சுவை
நிறைந்திருப் பதனைக் கண்டுள்ளம் மகிழ்ந்தவர்
பாடலைப் பாண்டியன் கரங்களிற் சேர்த்தனர்!
பாடலின் பொருளும் தன்மனக் கருத்தும்
ஒத்திருந்திடவே மகிழ்வுற்ற பாண்டியன்
பொன்னைத் தருமிக்கு அளித்திடப் பணித்தான்!
தருமியைப் புலவர்கள் அழைத்துச் சென்றனர்
பொற்கிழி அளித்திட முனையும் வேளையில்
அவ்விடம் வந்த நக்கீரர் தடுத்தார்.
அந்தப் பாடலைக் கேட்ட நக்கீரனார்
"இந்தப் பாட்டிலே குற்றம் இருப்பதால்
இதற்குப் பொற்கிழி கொடுப்பது தகாது!
நிறுத்துவீர்" என்றார் - இதனைக் கேட்டதும்
நெஞ்சம் வருந்திய தருமி விரைந்து
சம்பக சுந்தரர் சந்நிதி அடைந்து
"ஏழ்மையைப் போக்கிடப் பாடல் கேட்டேன்!
ஏளனம் செய்வதாய்ப் பாடல் தந்ததேன்?"-
என்று சுவாமி முன் இறைஞ்சி நின்றான்!
சிவப்பொழி வுள்ளதோர் புலவராய் மீண்டும்
சோமசுந்தரனார் தருமிமுன் வந்தனர்!
அவையினில் நடந்ததைத் தருமி யிடத்தே
ஆர்வம் மிகுந்திடக் கேட்டு அறிந்தனர்!!
தருமி தொடர்ந்திடச் சங்கத்தை அடைந்து
புலவோரைப் பார்த்துத் "தருமியின் பாடலில்
குற்றம் சொன்னவர் யாரோ?" என்றனர்!
"யானேதான" என்றார் புலவர் நக்கீரர்!
"குற்றம் என்னவோ?" - புலவர் கேட்டனர்!
"தருமியின் பாடலில் சொற்குற்றம் இல்லை - ஆயினும்
பொருட் குற்றம் உள்ளது" - என்றார் நக்கீரர்!
"அக் குற்றம் என்னவோ?" - புலவர் கேட்டனர்!
"பூவையர் கூந்தலில் வாசனை கமழ்வது
பூக்களை சூடிடும் செயற்கையா லன்றி
இயற்கை யாலில்லை" என்றார் நக்கீரர்!

முருகு

- (தொடரும்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*பொய்யாமை அன்ன புகழ்இல்லை எய்யாமை*
*எல்லா அறமும் தரும்.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### தவிர்க்கமுடியாத ஒப்புதல் வாக்குமூலம்

புதிதாக ஒரு பிரச்சினை உருவாகும்போதோ அல்லது உருவாக்கப்படும்போதோதான், அந்தப் பிரச்சினைக்குக் காரணமான மற்றும் அடித்தளமான பல பிரச்சினைகள் வெளியே தெரியவரப்படுகின்றன.

அதுவும் அரசியல் தொடர்பான பிரச்சினைகள் யாவும் ஏதோ ஒரு மூலப்பிரச்சினையில் இருந்தே ஆரம்பமாகி, பல்வேறு புதிய, தீர்க்கமுடியாத சிக்கல்களுள் இறுகுப்பட்டு, முடிவற்ற நெருக்கடியாக நீண்டு செல்லும் நிலை உருவாகி விடுகின்றது.

சிறிலங்காவின் இனவிவகாரமும், அத்தகைய ஒரு தன்மையையே உள்ளடக்கியுள்ள ஒன்றாக வளர்ச்சிகண்டு வந்துள்ளமையை ஒப்புக்கொண்டேயாக வேண்டும்.

இலங்கையின் இனப்பிரச்சினையின் மூலம் என்பது, தென் பகுதி அரசியல் தலைமைகளில் பெரும்பாலானவை தம்முடைய அரசியல் முன்னெடுப்புகளுக்கும், தேசத்தின் தலைமைத்துவத்தை தம்வசப்படுத்திக்கொள்வதற்கும் பேரினவாதக் கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்டதனால் ஏற்பட்ட ஒன்றேயாகும்.

ஆரம்பத்தில் சிறிய அளவில் குறுகிய அரசியல் சிந்தனை கொண்ட அரசியல்வாதிகளால் கையாளப்பட்ட இந்த இனவாத அரசியல் தந்திரோபாய உத்திகள், பண்டார நாயக்காவின் ஆட்சிக்காலத்தில் தீவிர அரசியல் கோட்பாடாக தவிர்க்கமுடியாத வகையில் உள்வாங்கப்பட்டமையானது, சிறிலங்காவின் தேசிய சிதைவுக்குரிய அத்திவாரத்தை இட்டது எனலாம்.

பேரினவாதம் பேசாமல், பேரினவாத சக்திகளின் ஆதரவுப் பின்னணியும், பௌத்த மதபீடங்களின் ஆசீர்வாதமும் இல்லாமல், சிறிலங்காவில் எந்தவொரு அரசும் நிலைத்து நிற்கவோ, மக்களின் ஆதவைப் பெறவோ முடியாத அவல நிலை கடந்த அரைநூற்றாண்டு காலமாக நிலவிவந்துள்ளமையே இன்றைய இந்த நாட்டின் அரசியல் கொந்தளிப்பு, சமூகக் குழப்பம், பொருளாதார பின்னடைவு போன்ற அனைத்திற்கும் ஒரே காரணமாகும்.

இது ஒன்றும் தவிர்த்திருக்க முடியாத பிரச்சினையேயல்ல.

ஆனால், இதனை தவிர்க்கவும், இனமுரண்பாடுகளை நீக்கவும், தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்பவும், இப்போது அவர்கள் அடிக்கடி உச்சரித்துவரும் 'தேசத்தின் இறைமையைப் பேணவும் சிங்கள பௌத்த அரசியல் தலைமைகளுக்கிடையேயான ஆதிக்க-அதிகார- போட்டியுணர்வுகள்' ஒருபோதுமே இடமளித்தது கிடையாது. மாறிமாறி ஆட்சிபீடம் ஏறிய அரசியல் அணிகள் ஒவ்வொன்றுமே இனவாதத்தை கருப்பொருளாக வைத்தே தமது அரசியல் பிரகடனங்கள் அனைத்தையும் வெளியிட்டன, அரசியல் யாப்புகள் அனைத்தையும் உருவாக்கின.

சிறுபான்மை சமூகத்தவர்களின், குறிப்பாக தமிழ்மக்களின் உரிமைகளை நிராகரிப்பதிலும், வாழ்நிலங்களை அபகரிப்பதிலும், இவற்றிற்கெதிராக குரல் கொடுக்க முனைந்த வேளைகளில், இராணுவம் மற்றும் சட்ட வலுவைப் பயன்படுத்தி அவற்றை ஒடுக்குவதிலும் அவர்கள் ஒருவரையொருவர் மிஞ்சும் வேகத்திலேயே செயற்பட்டும் வந்தனர்.

ஆனால், எழுபதுகளின் பிற்பகுதியில், தமிழ் மிதவாத அரசியல் தலைமைகளின் தொலைநோக்கு சிந்தனையற்ற செயற்பாடுகளினாலும், சந்தர்ப்பவாத போட்டி அரசியல் பலவீனங்களாலும் அதிருப்தியும், அவமானமும் கொண்ட இளைஞர்கள் தமது எழுச்சிவலுவை இனங்காட்டத் தொடங்கியபோதே, ஆயுதரீதியிலான, இராணுவ அணுகுமுறையிலான ஒடுக்குமுறைகளை அதே ரீதியில் எதிர்கொண்டு முறியடிக்கத் துணிந்து களமிறங்கியபோதே, சிறிலங்காவின் அரசியலில் நிலைமைகள் அனைத்தும் மாறத்தொடங்கின.

ஒவ்வொரு இனக்கலவரத்தின்போதும், பெற்ற பட்டறிவானது தமிழர்தம் எழுச்சிக்கு உரமூட்டின. அந்த எழுச்சியின் வளர்ச்சிப் பரிமாணமே, தமிழர் தரப்பின் இன்றைய கம்பீர நிலைக்குக் காரணமாகும். மிகச்சில வருடங்களின் முன்னர் பயங்கரவாதப் பிரச்சினையாக உலக சமூகத்தால் உணரப்பட்டிருந்த தமிழ்மக்களின் உரிமைப்போராட்டம் இன்று பேச்சுவார்த்தைகள் மூலம் அரசியல் ரீதியில் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினையாக, அதே சர்வதேச சமூகத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையானது சிங்கள அரசியல் தலைமைகளுக்கு கிடைத்துள்ள வரலாற்றுத் தோல்வியாகும்.

நேற்று முன்தினம் சிறிலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா அம்பாந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பேசும்போது, சுதந்திரம் கிடைத்த பின்னர் நாட்டை ஆட்சி செய்த சகல அரசாங்கங்களும் இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணத் தவறியதாலேயே யுத்தம் உருவானதாக ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை அளித்துள்ளார். இந்தத் தவறுக்கு தனது தந்தை, தாய், ஏன் தானும்தான் காரணம் என்பதை தவிர்க்க முடியாது ஒப்புக்கொண்டதன் மூலம், இன்றைய சிறிலங்காவின் சகல அவலங்கள், குழப்பங்கள், நெருக்கடிகள், பின்னடைவுகள் அனைத்திற்கும் தாமே காரணம் என்பதையும் ஏற்றுக்கொண்டுள்ளார் என்றே கூறவேண்டும்.

ஆனாலும், இவ்வளவும் நடந்த பின்னரும், இவ்வளவு தவறுகளுக்கும் பொறுப்பாக இருந்தபின்னரும்கூட, அவர் திருந்தவில்லை என்பதுதான் அசிங்கமான விடயமாகும்.

இன்றைய சமாதான முயற்சிகள் தனது அதிகார ஆணவச்செயலால் செயலறச் செய்துவிட்டு - குற்றங்களை ஒப்புக்கொண்டுவிட்டால் மட்டும்போதுமா?

தவறுகள் குற்றங்களல்ல என்பது உண்மைதான் அதே வேளை - குற்றங்களை தவறென எவரும் அர்த்தப்படுத்திவிட முடியாது.

இன்று ஜனாதிபதி செய்துள்ள குற்றங்களின் பின்விளைவுகளையும் அவர்தான் எதிர்கொள்ள வேண்டும்....!

இதுவும் ஒரு வரலாற்று நியதியேயாகும்.

## நாடும் நடப்பும்



# இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்கு மத்தியஸ்தம் வகிக்க இந்தியாவே சிறந்தது

## மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

இலங்கையின் இனப்பிரச்சனைத் தீர்விற்கு மத்தியஸ்தம் வகிக்கக்கூடிய சிறந்த நாடாக இந்தியாவே இருப்பதாகவும், இதனால், அந்த நாட்டின் உதவியை அரசாங்கம் கோர வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நோர்வே அரசாங்கம் சமாதானச் செயற்பாடுகளில் ஏற்பாட்டாளராக இருப்பதனை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதை இந்தக்கால கட்டத்தில் ஏற்கமுடியாது.

நோர்வே அரசாங்கத்தின் தீர்மானம் குறித்து கேட்டபோதே, அவர் இதனைக் கூறியிருக்கின்றார். அயல் நாடான இந்தியா முன்னரும் இந்தப் பிரச்சினையின்போது மத்தியஸ்தம் வகித்ததாக சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சித் தலைவர் - இது தனது தனிப்பட்ட கருத்து என்றும், தற்போதைய சூழ்நிலையில் இந்தப் பிரச்சனையை தீர்ப்பதற்கு சிறந்த நாடு இந்தியாவாகவே இருக்கும் என்றும் கூறினார்.

மேலும், இந்தியாவின் உதவியின்றி இந்தப் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வுகாண முடியாது என்பதே தமது நிலைப்பாடு என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே இந்த பிரச்சனையை தீர்ப்பதற்கு இந்திய அரசு முன்வர வேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்லமுடியாத சூழ்நிலையிலேயே நோர்வே அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்தது.

கடந்த ஐந்து மாதங்களாக, இது தெட்டத்தெளிவாக விளங்கியதாக குறிப்பிட்ட எதிர்க்கட்சித் தலைவர் - தற்போதைய அரசியல் நெருக்கடியினை காரணம்காட்டி சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்து விலகியதனை ஏற்க முடியாது.

ஜனாதிபதி அமைச்சுக்களை பொறுப்பேற்றது உள்விவகாரம்.இதனைக் காரணமாக காட்டுவது மத்தியஸ்தம் வகிப்போருக்கு ஏற்றதல்ல.

ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின்போது, இது குறித்து நோர்வே அரசாங்கம் எதனையும் தெரிவிக்கவில்லை. எதிர்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

மத்தியஸ்தம் வகிக்கும் இவர்கள் இப்பிரச்சனையை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்பதே தமது அபிப்பிராயம் என்றும், நோர்வேயின் தீர்மானம் அவசரமாக எடுக்கப்பட்ட வேகமான தீர்மானம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கூறினார்.

# இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் மட்டும் 36,054 உல்லாசப் பயணிகள் வந்துள்ளனர்

(கொழும்பு)

இந்தவருடம் செப்ரெம்பர் மாதத்தில் மட்டும் 36,054 உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளதாகவும், இது 9.3 வீத அதிகரிப்பெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1967 ஆம் ஆண்டு செபரெம்பர் மாதமே அதிகரித்த உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வந்திருந்தனர். அதன்பின், கடந்த 36 வருடங்களின்பின்பு, இந்த வருடமே செபரெம்பர் மாதம் இவ்வளவு தொகையான உல்லாசப் பயணிகள் இங்கு வந்துள்ளனர். கடந்த வருடம் செபரெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருடம் அந்த ஆண்டை மீறி 21.9 வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக, இலங்கையின் உல்லாசப் பிரயாணிகள் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்தவருட செபரெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருட செபரெம்பர் மாதம் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து இலங்கைக்கு வந்தவர்களின் எண்ணிக்கை 3.6 வீதத்தால் அதிரித்துள்ளது. இதன்படி கனடா, பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து கணிசமான உல்லாசப் பயணிகள் இங்கு வந்துள்ள அதேவேளை - ஜேர்மனியிலிருந்து இங்குவரும் உல்லாசப் பிரயாணிகள் 17.3 வீதத்தால் வீழ்ச்சியடைந்துளளது. இதற்கு அடுத்த படியாக பிரிட்டன் உள்ளது.

டென்மார்க் 15 வீதமும், பெல்ஜியம் 18.6 வீதமும், சுவிற்சலாந்து 34.5 வீதமும், நோர்வே 62.8 வீதமும், இந்த மாதம் அதிகரிப்பைக் காட்டியுள்ளன.

இதேவேளை, கடந்த ஆண்டு செபரெம்பர் மாதம் 9.3 வீதமாக இருந்த தெற்காசிய, கிழக்காசிய நாடுகளின் உல்லாசப் பயணிகளின் வருகை, இந்த ஆண்டு செபரெம்பர் மாதம் 12 வீத மாக அதிகரித்துள்ளது. அத்துடன், இந்தியாவிலிருந்து வரும் உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கையும் 9.6 வீதமாக அதிகரித்துள்ளது.

வட அமெரிக்க நாடான கனடாவிலிருந்து சென்றவருட செபரெம்பர் மாதம் 1.9 வீதமாக இருந்த உல்லாசப் பயணிகள் வருகை, இந்தவருட செபரெம்பர் மாதம் 8.8 வீதமாகக் குறைந்துள்ளது.

அவுஸ்திரேலியாவிலிருந்து வந்தவர்களின் தொகை 4.1 வீதமாக உள்ளது. இது 0.3 வீத அதிகரிப்பாகும். நியூசிலாந்திலிருந்து 19.6 வீதமும் அதிகரித்துள்ளது. அடுத்து மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து 6.4 வீதமும், லத்தீன் அமெரிக்கா, கரிபியன் தீவுகளிலிருந்து 40 வீதமும், கிழக்கு ஐரோப்பாவிலிருந்து 49.1 வீதமும், ஆபிரிக்க நாடுகளிலிருந்து 7.6 வீதமும் ஆக உல்லாசப் !பயணிகளின் வருகை இந்த ஆண்டு செபரெம்பர் மாதம் அதிகரித்துள்ளது.

# சமாதானப் பேச்சு இடைநிறுத்தப்பட்டமை நாட்டின் எதிர்காலத்தைப் பாதிக்குமாம்!

## ஆனந்தசங்கரி எச்சரிக்கை

சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டமையானது, நாட்டின் எதிர்காலத்தைப் பாதிக்குமென, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி தெரிவித்தார். நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

ஜனாதிபதி சந்திரிகா, சிறு குறைகளை அகற்றிவிட்டு எந்த வித தாமதமுமில்லாமல் - பிரதமர் ரணிலுடன் சேர்ந்து சமாதானத்தை முன்னெடுக்கவேண்டும்.

நாட்டின் இனப்பிரச்சினையால்- இங்கு வாழும் மக்கள் பல துன்பங்களை அனுபவித்து, பல இழப்புக்களைச் சந்தித்தவர்கள்.

நோர்வே தரப்பினரால் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சியானது - மிகவும் கடினமான ஒரு பணியாகும். ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் சமரசம் ஏற்படுவதற்காக அவர்கள் தம் பணியினை இடைநிறுத்தியுள்ளார்கள்.

அவர்களது இந்த நடவடிக்கையால் தமிழர்கள் மட்டுமல்ல நாட்டில் வாழும் அனைத்து மக்களும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

ஜனாதிபதி தற்போதைய குழப்பான சூழ்நிலையைத் தீர்ப்பதற்கு - தாம் எடுத்துக்கொண்ட அமைச்சுப் பதவிகளை மீளவும் கையளிக்கவேண்டு மெனவும் ஆனந்தசங்கரி மேலும் தெரிவித்தார்.

# தென்னிலங்கை அரசியல் குழப்பத்தினால்



இவ்வார உலக அரசியல் - வாஜ்பாயின் மூன்று நாடுகள் விஜயத்துடனும், ஈராக்கில் தற்கொலைத் தாக்குதலுடனும், இந்திய - சீன இராணுவ ஒத்திகையுடனும் முடிந்தாலும், இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வில் ஏற்பட்ட தடங்கலே முக்கியமான அம்சமாகக் காணப்பட்டது. எதிர்பார்க்கமுடியாத திருப்பங்கள் மிகவேகமாக மாற்றமடைந்து வருகின்றது. இது இலங்கையின் எதிர்காலத்திற்கே ஆபத்தாக மாறிவிடுமோ என்ற சந்தேகத்தை உருவாக்கியுள்ளது. மீண்டும் இந்தவாரம் இலங்கை அரசி யலின் சமாதானக்களத்தின் நிலையைப் பரிசீலிப்போம்.

**தற்போதுள்ள நிலையில், இலங்கையில் சமாதானம் தொடரவேண்டும் என விரும்புபவர்கள் - விடுதலைப் புலிகளும், இலங்கை மக்களுமாகவே உள்ளனர். அதிலும், தமிழ் மக்கள் முழுமையான சமாதானச் சூழலை எதிர்பார்க்கின்றனர். அதனால், ஜனாதிபதியின் நடவடிக்கையை அமெரிக்கா தெளிவாக நிராகரித்துவிட்டது என்பது புலனாகின்றது.**

ஜனாதிபதிக்கும், பிரதமருக்குமான முறுகல் - அவர்களின் சந்திப்பின் பின்பு, மேலும் அதிகரிப்பு அடைந்துள்ளது என்றே கூறலாம். ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பிரயோகித்துக்கொண்டு - பிரதமரையும், அவரது கட்சியினரையும் அணுகுவதையும், ஆட்சியிலிருந்து ஒருசிலரைப் பிடுங்க நினைப்பதையும், தற்போதைய அரசியல் தந்திரமாகப் பயன்படுத்தி வருகிறார். பிரதமரும், ஆளும்கட்சியும் முன்னர் பல தடவை தேசிய அரசைப் பற்றிய கருத்தை நிராகரித்தாலும், ஜனாதிபதி தற்போது திரும்பத் திரும்ப தேசிய அரசு பற்றியே உரையாடிக் கொண்டு இருக்கிறார். இதற்குப் பிரதான காரணம் - அரசியல் தேக்க நிலையைப் பயன்படுத்தி, ஆளும் தரப்பை உடைப்பதுடன், மக்கள் மததியில் தனது கௌரவத்தைப் பேணிக்கொள்ள முயல்வதுமாகும்.

தற்போது எழுந்துள்ள சூழல், ஜனாதிபதியால் ஏற்பட்டது என்பதை சர்வதேச ஊடகங்களும், உள்நாட்டு ஊடகங்களும் வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளன. இதனைக்கண்டு ஜனாதிபதி மட்டுமல்ல, சிறிலங்கா சுதந்திரக்கட்சி உட்பட பொதுஜன ஐக்கிய முன்னணிக்கட்சிகளே அதிர்ச்சி அடைகின்றன. இதனாலேயே, ஜனாதிபதி சமாதானத்தின்மீது அக்கறையும், கரிசனையும் உடையவர் போல் காட்டுகின்றார். ஜனாதிபதிக்குச் சமாதானத்தின் மீது கரிசனை இருந்திருந்தால், விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால வரைபுத்திட்டத்தைப் பரிசீலித்து, அதற்குரியதிருத்தங்களைச் சிபார்சு செய்திருப்பார். ஆனால், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், அதன் பிரதான தலைமையும் - விடுதலைப்புலி கள் முன்வைத்த வரைபை முற்றாக நிராகரித்த பின்பு, ஜனாதிபதி எப்படி சமாதானத்தை முன்னெடுக்கப் போகின்றார்.

அப்படியாயின், ஜனாதிபதி கூறும் சமாதானம் - சமாதானத்துக்கான போரா என்பதே தற்போது எழுந்துள்ள குழப்பம் ஆகும். அதிலும் போரைத் தொடங்க இலங்கை இராணுவத்தினால் முடியுமா என்பதைச் சர்வதேச இராணுவ நிபுணர்களிடமே கேட்கவேண்டியுள்ளது.

ஜனாதிபதியின் குழப்பம் - ஜனாதிபதியையே குழப்பியுள்ளது. அவரால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அநேகம் - பலவீனம் அடையஆரம்பித்துள்ளது. அவர் ஒரு புதிய அரசை உருவாக்கத்திட்டமிட்டார். அதற்காகப் பிரதமரின் சகாக்கள் பலரை விலைக்கு வாங்க முயன்றார். ஆரம்பத்தில் வெளிவிவகார அமைச்சரான ரிரோன் பெர்னாண்டோவை அணுகினார். அதுசாத்தியப்படாதபோது, பின்வரிசை அங்கத்தவர்கள் பலரை அணுகி, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பல கோடி ரூபாவை வழங்க முன்வந்தார். அதுவும் தற்போது சாத்தியப்படாதது மட்டுமல்ல, அம்பலப்படுத்தப்பட்டுள்ள சம்பவமாகவும் மாறியுள்ளது. இதனால, தேசிய அரசு என்ற அம்சத்தைப் போன்று, புதிய அரசு அமைப்பது பற்றிய எண்ணத்தையும் ஜனாதிபதி கைவிடும் நிலைக்கு வந்துள்ளார். ஆனால், என்றுமே சிறுபான்மை தமிழ் - முஸ்லிம் கட்சிகளுடன் தனது உரையாடலைப்பேணி வருகின்றார். இதன்மூலம், இக்கட்சிகளை விலைக்கு வாங்கமுடியுமென ஜனாதிபதி கருதுகின்றதை உணரமுடிகின்றது.

இவ்வாறு உள்நாட்டு அரசியலில் குழப்பம் நீடிப்பது போன்று, வெளிநாட்டு சக்திகளும் ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு மேலும் குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றன. அதில் மிகப்பிரதான குழப்பமாக விளங்குவது - நோர்வே தனது பணியிலிருந்து தற்காலிகமாக விலகுவதாக அறிவித்துள்ளமையாகும்.

உண்மையில் - ஜனாதிபதி சமாதானத்தை, தான் விரும்புவதாகக் காட்டிக்கொண்டு, தென்னிலங்கையில் பொருளாதாரத்தையும், அதற்கான வெளிநாட்டு உதவிகளையும் தொடர்ந்து பேணவிரும்பினார். சமாதானம் நிலைத்திருந்தால் மட்டுமே, ஐரோப்பிய மற்றும் ஜப்பான் உட்பட்ட உதவிவழங்கும் நாடுகள் - உதவிகளையும், முதலீடுகளையும் வழங்கமுடியுமென குறிப்பிட்டிருந்தன. இதனால், சமாதானத்தின் பெயரால் அவற்றைத்தொடர்ந்து பெற்றுக்கொள்ளலாம் என ஜனாதிபதி தீர்மானித்திருந்தார்.

அத்தகைய நிலையை நீடிக்க வாய்ப்பாக - வெளிநாட்டு தூதுவர்களையும், இராஜதந்திரிகளையும் சந்தித்து, அவர்களுக்குத் தனது சமாதான அணுமுறைகள் பற்றித் தெரிவித்ததுடன், முதலீடுகளைத் தொடருமாறும் கூறியிருந்தார். ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அத்தகைய நிலையை அதிககாலம் நீடிக்கவிடாது, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளார். தற்காலிகமாக நோர்வே பின்வாங்குவதும், அது நிரந்தரமாவதும் சாதாரணமான விடயம். அதனைத் தற்காலிகமானதாகவோ அல்லது நிரந்தரமானதாகவோ மாற்றுவது - ஜனாதிபதியின் நடவடிக்கையில் தங்கியுள்ளது என்பது நோர்வேயின் நடவடிக்கையூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, ஜனாதிபதி எடுத்துக் கொண்ட அடுத்த கட்ட நடவடிக்கையும், பெருமளவுக்குத் தோல்வியை நெருங்கிக் கொண்டு இருக்கின்றது.

இத்தகைய நெருக்கடியுடன், ரணில் விக்கிரமசிங்கவும் சமாதான நடவடிக்கையிலிருந்து விலகுவதாக முடிவெடுத்துள்ளார். அதாவது, சமாதானம் முற்றாகக் குழம்பியுள்ளது அல்லது குழப்பப்பட்டுள்ளது. சமாதானத்தைக் குழப்பிய தரப்பு எதிர்பார்த்த எந்த இலக்கையும் அடைய முடியாதநிலையில் உள்ளது. ஆனால், சமாதானத்தைக் குழப்புவதில் அதுவெற்றி கண்டது என்பது மட்டுமே அது அடைந்த தற்காலிக வெற்றியாகும். ஜனாதிபதியும், பொதுஜன ஐக்கிய முன்னணியினரும், ஜே.வி.பி. கட்சியினரும், பௌத்தபிக்குகள் சிலரும் எதிர்பார்த்தது போன்று, இலங்கையின் சமாதான முயற்சியைச் சீர்குலைப்பதில் தமது இலக்கை அடைந்துள்ளனர். ஆனால்- பிரதமரும், நோர்வே அனுசரணையாளர்களும் ஒரேசந்தர்ப்பத்தில் விலகுவதாக அறிவித்த நிகழ்வு - பிரதமருக்கு மேற்கு நாடுகள் அளிக்கும் ஆதரவையும், ஒத்துழைப்பையுமே காட்டுகின்றது.

மேலும், அமெரிக்கா - இலங்கையின் சமாதான முயற்சிக்குத் தனது ஆதரவைத் தொடர்ந்து வழங்கப் போவதாகக் கூறியுள்ளதும், ஜனாதிபதிக்கு மேலும் ஒரு பின்னடைவாகவே அமையவுள்ளது. தற்போதுள்ள நிலையில், இலங்கையில் சமாதானம் தொடரவேண்டும் என விரும்புபவர்கள் - விடுதலைப் புலிகளும், இலங்கை மக்களுமாகவே உள்ளனர். அதிலும், தமிழ்மக்கள் முழுமையான சமாதான சூழலை எதிர்பார்க்கின்றனர். அதனால், ஜனாதிபதியின் நடவடிக்கையை அமெரிக்கா தெளிவாக நிராகரித்துவிட்டது என்பது புலனாகின்றது.

அமெரிக்கா - விடுதலைப் புலிகள் முன்வைத்த வரைபை முழுமையாக நிராகரிக்காதநிலையில், சில திருத்தங்களுடன் அமுல்படுத்தி, ஒரு ஐக்கியப்பட்ட சமாதானமான இலங்கையை உருவாக்க விரும்புகிறதென்பது புலனாகின்றது. தனது நலன்களையும், இலங்கை அரசின் நலன்களையும் பாதுகாப்பதுடன், போரற்ற இலங்கையை உருவாக்க விரும்புகின்றது. எனவே, இன்றைய சூழல் - அத்தகையநிலையைக் குறைவடையச் செய்துள்ளதுடன், அமெரிக்க நலன்களைப் பாதிக்கும் விடயமாகவும் காணப்படுகின்றது. இதனை மீளக்கட்டியெழுப்புவதற்காகவே நோர்வே தற்காலிக பின்வாங்கல் எனக் கூறிக்கொண்டு வெளியேறியுள்ளது.

எனவே, தற்போதையநிலை நீடித்தால், போர் வெடிக்குமா? என்பது இலங்கை மக்களிடம், குறிப்பாக தமிழ்மக்களிடம் எழுந்துள்ள பிரதான கேள்வியாகும். அவ்வாறு போரைத் தவிர்க்க வேண்டுமாயின், அவசரகால நிலையை அறிவித்துவிட்டு, ஜனாதிபதி பின்வாங்கியதுபோல், பாதுகாப்பு உட்பட, பறிக்கப்பட்ட அமைச்சுக்களை ஜனாதிபதி - ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திடம் மீளக் கையளிக்க வேண்டும் அல்லது நாடாளுமன்றத்தைக் கலைத்து, தேர்தலை நடாத்தி, மீளவும் ஓர் அரசாங்கத்தை அமைக்கவேண்டும். அவ்வாறு தேர்தல் நடந்தாலும், ஜனாதிபதி நினைப்பதுபோன்று, அவரது கட்சி எதிர்பார்க்கும் சாதாரண பெரும்பான்மைகூடக் கிடைப்பது கடினமானது. அவ்வாறு ஜனாதிபதி - தேர்தலை எதிர் கொள்ள முன்னர், தனது தேர்தல் வெற்றிக்காக ஒரு போரைத் தொடருவாரா என்ற இன்னோர் கேள்வியுமுள்ளது. அதற்கான வாய்ப்பு ஜனாதிபதிக்கு ஏற்பட்டாலும், அதிர்ச்சியடைய வேண்டியதில்லை. எனினும், வேறு வழிகளில் போர் மூழுவதற்கான வாய்ப்பு அரிதாகவே உள்ளது.

புலிகள் தெளிவாக அறிவித்து விட்டனர் - போர் திணிக்கப்படாமலன்றி, போரைத் தொடருவது தமக்கு விரும்பாத ஓரம்சம் என்று. இலங்கை இராணுவம் ஒரு போரைப் பெரியளவில் திணிக்கும் வலுவிலில்லை என்பது மேற்கு நாட்டு நிபுணர்களது கடந்தகாலக் கணிப்பீடு. அதற்காகவே பிரித்தானிய, அமெரிக்க நிபுணர்கள் இங்கு வரவழைக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, இலங்கை இராணுவத்தின் திறனை வளர்க்க வேண்டுமென ஆலோசனை வழங்கியுள்ளனர். எனவே, போர் உடனடியாக மூழுவது - இராணுவ வல்லுநர்களது நோக்கில் இயலாத தொன்றாகவே உள்ளது. மற்றும் பொருளாதார அடிப்படையில் நோக்கினாலும் - போர் கடினமான தொன்றாகவே காணப்படுகின்றது. தென்னிலங்கை பொருளாதாரம் மீளவும் தற்போதைய அரசின் காலத்திலேயே சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் போரை ஆரம்பிப்பது என்பது ஜனாதிபதிக்கும், அவரது கட்சியினருக்கும், அரசியல் அஸ்தமனத்தை எதிர்காலத்தில் ஏற்படுத்திவிடும். அதனால், போர் மூழுமென உடனடியாக அஞ்சவேண்டிய சூழல் பெரிதாக இல்லாத நிலையே காணப்படுகின்றது. இவ்வாறு- இவ்வளவு அபாயத்தையும், நெருக்கடியையும் எதிர்கொண்டு, ஜனாதிபதி போரை ஆரம்பிப்பாராயின், அதற்கு யாரும் விளக்கமோ, விவரணமோ கொடுக்கமுடியாது.

போரைத் தொடக்கிவிட்டு, இந்தியாவின் உதவியை நாடிப் போரைத் தொடரலாமென்ற வாதமும் தமிழ் மக்களிடம் காணப்படுகின்ற இன்னோர் அம்சமாகவுள்ளது. நிச்சயமாக இந்தியத்தரப்பு நேரடியாகப் போரில் ஈடுபடுமென எதிர்பார்ப்பது கடினமானது. அவர்களது உள்நாட்டு நிலைவரம், காஷ்மீர் தொடர்பான பாகிஸ்தானின் நிலைப்பாடு, பாரதீய ஜனதாக் கட்சிக்கு அடுத்தகட்ட தேர்தல் தொடர்பான சூழல் என்பவற்றுக்கப்பால், கடந்த தடவை இலங்கையில் நேரடியாகத் தலையிட்டு, ஏற்பட்ட விளைவுகளைத் தீர்த்துக்கொள்ள முடியாத நிலையில், மீளவும் இலங்கை விடயத்தில் நேரடித் தலையீட்டை இந்தியா மேற்கொள்ளுமெனக் கருதுவதற்கான வாய்ப்பு அரிதாகவே உள்ளது.

எனவே, ஜனாதிபதி இத்தகைய நிலையை அடுத்த 19 ஆம் திகதி வரை நீடிக்கலாம். அவ்வாறு 19 ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்படாதுவிட்டால், ஜனாதிபதி தேர்தலுக்குத் தயாராகிறார் என்று அர்த்தமாகும். அதற்கும், வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படுதல் வேண்டும். அடுத்த நிதியாண்டுக்கான ஒதுக்கீடுகள் சாத்தியப்படுத்துதல் வேண்டும். ஆண்டின் இறுதிக் காலப்பகுதி என்பதால், வரவு - செலவுத் திட்டம் கொண்டு வரப்படுதல் அவசியமானதொன்றாக உள்ளது.

மொத்தத்தில் தமிழ்மக்கள் - போரையும், சமாதானத்தையும் எதிர்கொள்ளக் கூடியவர்களாகவே உள்ளனர். அவர்கள் சுதந்திர இலங்கையின் வரலாற்றில் இப்படியான பல கட்டங்களைச் சந்தித்தவர்களாவர்.

# உடனடியாக போர் வெடிக்குமா?





**கே.ரி.கணேசலிங்கம்**

# ஈராக் ஹெலி விபத்தில் கொல்லப்பட்ட படையினரின் தொகை 17 ஆக உயர்வு!



(பக்தாத்)

ஈராக்கின் மொசூல் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இரு 'பிளாக் ஹொக்' ஹெலிகொப்ரர்கள் நடு வானில் வெடித்துச் சிதறிய சம்பவத்தில் கொல்லப்பட்ட அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கை 17 ஆக உயர்ந்துள்ளது.

ரொக்கெட்டை உந்துசக்தியாகக் கொண்டு செயற்படும் கிரனைட்டுக்கள் மூலம் மேற்கொண்ட தாக்குதலிலேயே ஹெலிகொப்ரர்கள் நடுவானில் வெடித்துச் சிதறியதாக சம்பவத்தை நேரில்கண்ட ஈராக்கியப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

இரு ஹெலிகொப்ரர்களும் 250 மீற்றர் இடைத்தூரத்தில் விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் கருத்துத் தெரிவிக்கும்போது - ஒரு ஹெலிகொப்ரரின் வால்ப்பகுதியில் ரொக்கெற் வந்து பட்டதாகவும், அதனால் நிலை குலைந்த அந்தக் ஹெலிகொப்ரர் மற்றைய ஹெலியுடன் மோதுண்டதை தான் பார்த்ததாகவும் தெரிவித்தார்.

ஈராக்கில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் ஒரே தடவையில் அதிக எண்ணிக்கையான படையினர் கொல்லப்பட்ட சம்பவம் இது எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த 3 வாரங்களில் மேற்படி இரு ஹெலிஹொப்ராகளுடன் சேர்த்து 3 அமெரிக்கக் ஹெலிகொப்ரர்கள் வீழ்த்தப்பட்டுள்ளன. இதன்போது 22 படையினர் உயிரிழந்தனர்.

ஈராக்கில் அமெரிக்கப்படையினர் தொடர்ந்து சந்தித்துவரும் இழப்புக்களையும், வன்முறைகளையும் தவிர்க்கும் பொருட்டு - ஈராக்கியர்களிடம் ஆட்சி செய்யும் சுயநிர்ணய உரிமையை வழங்குவதற்குத் தீர்மானித்திருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ள நிலையில் மேற்படி தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் ஹெலி வீழ்ந்து நொருங்கிய சம்பவத்துடன் இதுவரை 417 அமெரிக்கப் படைவீரர்கள் ஈராக்கில் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# துருக்கியில் தாக்குதல் நடத்தியவர்களை கண்டுபிடிக்க விசாரணைகள் ஆரம்பம்!



துருக்கி தலைநகர் ஸ்தான்புல்லில் இரு யூத மதவழிபாட்டுத் தலங்களின் மீது நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் தொகை 22 ஆக உயர்ந்துள்ளது. இந்தக் குண்டுத்தாக்குதல்களின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்பதில் இஸ்ரேல், துருக்கி ஆகிய நாடுகளைச் சேர்ந்த பாதுகாப்பு அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

இடிபாடுகளின் மத்தியில் இருந்து குண்டுத் தாக்குதலின் தடயங்களை அவர்கள் தேடிவருகின்றனர். இதேவேளை, இந்தத் தாக்குதல்களில் காயமடைநதவர்களின் எண்ணிக்கை 242 ஆக உயர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்த பலர் சிகிச்சையின் பின் வீடு திரும்பியுள்ளதாகவும் - இந்தத் தாக்குதலுக்கு அல் - கொய்டா தீவிரவாதிகளே காரணமாக இருக்கலாம் என்ற ஊகங்கள் வலுத்து வருகின்றன.

இஸ்ரேலிய தடயவியலாளர்கள் இடிபாடுகளுக்கு மத்தியில் மேலும் பல உடல்கள் சிக்கியுள்ளனவா எனத் தேடிவருகின்றனர்.

இதனிடையே இஸ்ரேல் வெளிநாட்டமைச்சர் சில்வர் சலோன் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விஜயம் செய்துள்ளார். துருக்கிய அதிகாரிகளை அவர் சந்திக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. துருக்கியில் 20,000 யூதர்கள் வசித்துவருவதுடன் தலைநகரில் 17 யூத வழிபாட்டுத் தலங்கள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

யூதர்கள் துருக்கியில் 500 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறார்கள். இவர்களது மூதாதையர்கள் ஸ்பெயினில் இவர்களது இனத்தை மதமாற்றம் செய்ய முற்பட்டபோது, துருக்கிக்கு வந்து சேர்ந்தனர்.

நான்காவது நூற்றாண்டில் யூதர்கள் துருக்கிக்கு வந்து சேர்ந்ததாக தொல்பொருள் அய்வுகள் கூறுகின்றன. தற்போது துருக்கியிலுள்ள யூதர்கள் 'செப்பா டிம்' எனப்படும் இனத்தைச் சேர்ந்தவர்கள். ஸ்பெயின், போத்துக்கல் ஆகிய நாடுகளில் 1492 ஆம் ஆண்டில் கிறிஸ்தவ மதமாற்றத்துக்கு அந்நாடுகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது, தப்பியோடி துருக்கிக்குள் வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலக நோக்கு

# றுவாண்டா மக்களை படுகொலை செய்த போராளிக் குழுத்தலைவர் சரணடைந்தார்

1994 ஆம் ஆண்டு றுவாண்டாவில் 800,00 டுட்சி இன மக்களின் படுகொலைக்குக் காரணமாக இருந்த கூருஸ் போராளிக் குழுத்தலைவர் போல் ரவறகபீச் அரசாங்கத்திடம் சரணடைந்துள்ளார்.

கொற்ணகொ ஜனநாயகக் குடியரசில் கடந்த 10 ஆண்டுகள் வாழ்ந்த பின் மீண்டும் நூற்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களுடன் இவர் றுவாண்டா திரும்பியுள்ளார்.

இவரின் தலைமையில் றுவாண்டாவின் விடுதலைக்கான ஜனநாயகப் படை என்ற பெயரில் முன்னால் றுவாண்டா இராணுவத்தின் படையினரின் ஒருதொகுதியும் வேறு சில போராளிக் குழுக்களுக்கு தலைமை தாங்கி ஜனநாயகக் கொங்கோவின் கிழக்கு பகுதியில் உள்ள காடுகளை தனது தலைமைப்பீடமாகக் கொண்டு தாக்குதல்களை நடத்தி வந்துள்ளன.

மேலும், தலைநகர் சிகாவியில் வந்திறங்கியபோது, றுவாண்டா படை அதிகாரிகள் இவர்களை வரவேற்றுள்ளனர். ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு, சமாதானமான முறையில் போராடப் போவதாக இவர் தெரிவித்துள்ளார்.

டுட்சி இன மக்களின் படுகொலைக்கு முன்னர் இவர் றுவாண்டா பொலிஸ் படையில் உயர் அதிகாரியாக கடமைபுரிந்து வந்துள்ளார்.

டுட்சி இனத்தைச்சேர்ந்த போல் ககாமி ஜனாதிபதியாக பதவியேற்ற பின் 2 மில்லியன் குருஷ் மக்கள் படுகொலைகளில் இருந்து தப்பிக் கொள்வதற்காக கொங்கோவிற்குள் அடைக்கலம் கோரியிருந்தனர்.

# நேபாள படையின் உயர் அதிகாரி தீவிரவாதிகளின் தாக்குதலில் பலி!

நேபாளத்தின் தென்பகுதியான மக்வன்பூரில் மாவோ தீவிரவாதிகளால் நேபாள படையின் உயர் அதிகாரியான பிரிகேடியர் ஜெனரல் பகதூர் பாண்டே கொல்லப்பட்டுள்ளார்.

ஜெனரல் பாண்டே பயணம் செய்த வண்டி கண்ணிவெடியொன்றில் சிக்கியபோது அதில் பிரயாணம் செய்த மேலும் 3 படைவீரர்கள் கொல்லப்பட்டும் 6 பேர் காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவித்தன.

நேபாள் மன்னர் ஞானேந்திராவை அகற்றக் கோரி மாவோ தீவிரவாதிகள் போராடிவருகின்றனர்.



கடந்த ஓகஸ்ட் மாதம் மாவோ தீவிரவாதிகளுக்கும் நேபாள மன்னருக்கும் இடையே பேச்சுவார்த்தை நிறுத்தபபட்ட பின் இதுவரை 1000 இற்கு மேற்பட்ட மக்கள் உயிழந்துள்ளனர்.

## புகைப்படத் தொகுப்பு









ஈராக்கில் நேற்றுமுன்தினம் அமெரிக்காவின் இரு பிளக் ஹொக் ஹெலிகொப்டர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் சிதறிய ஹெலியின் ஒருபகுதியை முதற்படத்திலும், வீழ்ந்த ஹெலியினை பொதுமக்கள் பார்வையிடுவதை இரண்டாவது படத்திலும், வீழ்ந்த ஹெலியினை பாரந்தூக்கி மூலம் அகற்றுவதை மூன்றாவது படத்திலும், ஹெலி வீழ்ந்த இடத்தினருகே அமெரிக்கப் போர் வீரர்கள் தீவிர பாதுகாப்பு வழங்குதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சிறுபான்மை கட்சிகளின் பலத்தை சிதைக்கவே தேசிய அரசாங்கம் குறித்து ஜனாதிபதி பேச்சு!

## அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கூறுகிறார்

(கொழும்பு)

சிறுபான்மைக் கட்சிகளின் பலத்தினை நாடாளுமன்றத்தில் ஒடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே தேசிய அரசு அமைக்கவேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதி முன்வைத்துள்ளார்.

- இவ்வாறு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று நாவலப்பிட்டியவில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றும்போது -

ஜனாதிபதி தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு பல்வேறு தரப்பினருக்கும் கோரிக்கை விடுத்துவருகிறார்.

தேசிய அரசாங்கம் அமைப்பதன் மூலம் சிறுபான்மைக் கட்சிகளின் பலம் நாடாளுமன்றத்தில் அற்றும்போகும் நிலை உருவாகும்.

ஜனாதிபதியின் இந்த முயற்சிக்கு நான் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. இந்த யோசனைக்கு உரிய மாற்றுயோசனை ஒன்று தம்மிடம் இருப்பதாகவும், இந்த விடயத்தில் விடுதலைப் புலிகளும், ஏனைய சிறுபான்மைக் கட்சிகளினதும் ஒத்துழைப்பைப்பெறத் தயங்கப் போவதில்லை என்றும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்தார்.

# பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறுமானால் அதனை எதிர்கொள்வதற்குத் தயார்

## முஸ்லிம் காங்கிரஸ் அதியுயர் பீடம் முடிவு

(கொழும்பு)

பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறுமானால் அதனை எதிர்நோக்கும் வகையில் தயாராகவேண்டும் என்று, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் அதிஉயர்பீடம் தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் கொழும்பில் நேற்றுமுன்தினமிரவு கூடிய அதி உயர்பீடக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்ததாவது,

தெற்கில் ஏற்பட்டிருக்கின்ற அரசியல் நெருக்கடி நிலமையை சுமுகமாகத் தீர்த்துக்கொள்வதற்கு இரண்டு பிரதான கட்சிகளுக்கும் இடையில் இணக்கப்பாட்டினை கொண்டுவருவதற்கான முயற்சிகளுக்கு - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்தும் தனது ஆதரவினை வழங்கும்.

இருந்தபோதிலும் தேர்தல் ஒன்றுக்கு எந்த நேரத்திலும் முகம் கொடுப்பதற்கு தயாராக இருக்க வேண்டும் என்பதை - தங்களுடைய அரசியல் அதிஉயர்பீட உறுப்பினர்கள் அனைவரும் மிகவும் திட்டவட்டமாக வலியுறுத்தினார்கள் என்று கூறினார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், இந்தப் பேச்சுவார்த்தைகளுக்குப் புறம்பாக - மத்தியிலும், வடக்கு, கிழக்கு இனப்பிரச்சினைத் தீர்விலும் முஸ்லிம்களின் பரிமாணம் குறித்தும், தங்களுடைய மாற்று யோசனைகள் குறித்து விளக்கம் அளிக்கவேண்டிய அவசியத்தையும், சமாதானப் பேச்சுவார்த்தைகளிலே முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற பாதிப்புக்கள் குறித்தும் நாட்டிலுள்ள எல்லா அரசியல் கட்சிகளுடனும் தாங்கள் கருத்துக்களை பரிமாறிக்கொள்ள வேண்டிய அவசியம் குறித்தும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்தார்.

இதற்கான பேச்சுவார்த்தைகளும கூட்டங்களும் இதர கட்சிகளோடு விரைவில் நடத்தவிருப்பதாகவும், இதற்கென கட்சியின் விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருக்கிறது என்று அவர் கூறினார்.

இதேவேளை, அடுத்த சில தினங்களில் தங்களது கட்சி சில முக்கியஸ்தர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## திருநெல்வேலியில் புதிய காவலரண்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி தபால் கட்டைச் சந்திப் பகுதியில் புதிதாகக் காவலரண் அமைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை அந்த இடத்திற்கு வந்த பத்துபேர் கொண்ட இராணுவக் குழுவினரே இந்தக் காவலரணை அமைத்திருக்கின்றனர்.

இதனால் அந்தப் பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இதேவேளை, நேற்று ஸ்ரான்லி வீதியில் உள்ள இராணுவ முகாம் ஒன்றின் காவலரண்களும் புனரமைக்கப்பட்டதுடன், பலப்படுத்தப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப,ச,111)

## சுதந்திரக்கட்சி இன்று கூடுகிறது

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய நடவடிக்கைக்குழு இன்று கொழும்பில் கூடவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரு கட்சிகளும் கூட்டணி அமைப்பது குறித்து ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நாற்சந்தி

அரசியல் நெருக்கடிகள் குறித்து ஜனாதிபதியும் சந்திரிகாவும், பிரதமர் ரணிலும் நேற்று முன்தினம் கண்டியில் சந்தித்துப் பேசினார்கள். என்ன பேசியிருப்பார்கள்?-

என்ன மிஸ்டர் ரணில் எல்லாத்தையும் என்ரை தலையில் போட்டால் எப்படி?

மேடம் நீங்கள் மட்டும் என்ரை காலை வாரிவிட்டது மட்டும் சரியா?

நான் காலைத்தான் வாரினன்... அதாலை உங்கட தலைதப்பியது அல்லவா... இல்லையேல் நீங்கள் தமிழீழம் அமைக்க முன்னோடியாக இடைக்கால நிர்வாகசபையை புலிகளுக்கு வழங்குவதாகக்கூறி ஜே.வி.பியோ, சிஹல உறுமயவோ உங்கட தலையை எல்லோ பிடுங்கியிருப்பார்கள்.

அவையளுக்கும் நீங்கள் தான் அப்படிச்செய்யுங்கோ என்று ஆணைபிறப்பித்து இருப்பீர்கள்...

அப்படிச்செய்யாட்டி என்ரை தலையெல்லோ போயிருக்கும்...

சரி எப்படியோ இரண்டு பேற்றை தலையும் தப்பீற்றுது என்று சொல்லுறியள்... அப்படித்தானே

ஓமோம் ஜே.வி.பிக்காரர் என்ரை கணவனையே சுட்டவங்கள் உங்களுக்குத் தெரியும்தானே...

அதுசரி இப்ப என்ன செய்கிறது. உலகம் சமாதானத்தை வலியுறுத்தி அழுத்தமெல்லே தருகிறது...

அதுதான் நீங்கள் புஷ்ஷிடம் கூறி அமெரிக்காவை கொஞ்சம் மிரட்டாமல் இருக்கச் செய்யுங்கள்....

ஏன் நீங்கள் இந்தியாவிடம் சொல்லி கொஞ்சம் குழப்பாமல் இருக்கச் சொன்னால் என்ன...

என்ன செய்யிறது மிஸ்டர் ரணில். நான் பிள்ளையார் பிடிக்கப் போய் அது குரங்காகப் போட்டுது...

நானும் உலகத்தை வைச்சுப் புலியைப் பிடிக்க நினைச்சன் உங்கட வேலையால புலி உலகத்தை தன்னோட பிடியிக்க வைச்சிட்டுத்து..

ம்..ம்..ம்..

உஷ்..உஷ்..உஷ்.. இரண்டு பேரின் பெருமூச்சு சத்தத்தில் திடுக்கிட்டு விழித்தார், சந்தியில் பஸ்சுக்கு காத்திருந்தபடி தூங்கிவிட்ட கனகண்ணர்..

-தெருவாசி

## உஷார் நிலையில்..

கும் அரசியல் நிலைமைகளை உன்னிப்பாக அவதானிக்குமாறு எம்மை எமது அரசாங்கம் கேட்டுள்ளது. இலங்கையில் ஏற்படும் பாதிப்புக்கள் தமிழ் நாட்டிலும் பின்விளைவுகளை ஏற்படுத்தவல்லது.

நோர்வே அரசு சமாதான முயற்சிகளிலிருந்து பின்வாங்கிய பின்னர் இந்திய இராணுவம் கொழும்பின் நடவடிக்கைகளை அவதானித்து வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஈராக்கில்...

நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

நேற்றிரவு அமெரிக்கப் படையினர் 500 இறாத்தல் ஏவுகணைகள் மூன்றை ஏவித் தாக்கியதால் பக்தாத் நகரில் பாரிய குண்டுச் சத்தங்கள் கேட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

## தமிழ்த் தேசிய...

கிறது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் புலிகளுக்கு ஆதரவாக இருப்பதுடன், ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு ஆதரவளித்து வருவதாகவும் இந்த இணையத்தளம் மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை - இது தொடர்பாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் செயலாளர் இரா.சம்பந்தனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, இவ்வாறான ஜனாதிபதியின் அழைப்புக்கள் எதுவும் தமக்கு கிடைக்கவில்லையெனத் தெரிவித்தார்.

## சமாதான...

தையடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியைக் காரணம் காட்டி சமாதான முயற்சியிலிருந்து நோர்வே விலகியுள்ளது.

ஜனாதிபதி மீது சந்தேகம் ஏற்பட்டதாலேயே நோர்வே சமாதான முயற்சியிலிருந்து விலகியுள்ளது.

ஜனாதிபதியின் மீது சந்தேகம் கொண்ட இவர்களை, ஜனாதிபதி சமாதானப் பேச்சுவார்த்தைகளிலிருந்து முற்றாகவே விலக்கிவிட வேண்டும் என்று, சிஹல உறுமயவின் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மக்கள் வங்கி வெளியிட்ட அறிக்கையில் தமிழீழ வைப்பகமும் இடம்பெற்றுள்ளது!

(கொழும்பு)

இலங்கையின் மக்கள் வங்கியினால், கடந்த மாதம் 31 ஆம் திகதி வெளியிடப்பட்ட "பிஸ்னஸ் இன்ரலிஜன்ட் றிப்போட்" என்னும் அறிக்கையில், தமிழீழ வைப்பகத்தின் புதிய கிளைத்திறப்பும், அது தொடர்பான நடவடிக்கைகளும் இடம்பெற்றுள்ளது.

தமிழீழ வைப்பகம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கை மக்கள் வங்கியில் பணிபுரியும் சகல ஊழியர்களும் பார்வையிடுவதற்காக கொடுக்கப்பட்டுள்ளதாகவும், இந்த அறிக்கையில் வைப்பகத்தின் திருமலை மாவட்டக் கிளையைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப் படுகிறது.

தமிழீழ வைப்பகத்தைவிட அந்த அறிக்கையில் சம்பத் வங்கி, இலங்கை வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, பான ஏசியா வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, தோமஸ்குக்(இந்தியா) லிமிட் போன்ற வங்கிகளது கிளைகளைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நாடாளுமன்றத் தேர்தலை...

விடுத்தது.

ஜே.வி.பியுடன் கூட்டணி அமைப்பதற்கு ஜனாதிபதி எடுக்கும் முயற்சிகளை தடுக்கும் செயற்பாடுகளில் ஐ.தே.கட்சி ஈடுபட்டுள்ளது. இதற்காக பொதுஜன ஐக்கிய முன்னணியினருக்குப் பணத்தைக் கொடுத்து கூட்டணி அமைப்பதற்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

ஜே.வி.பியுடன் கூட்டணி அமைக்கப்படாதுவிட்டால், நாட்டுக்கு நன்மை அளிக்கக்கூடிய கட்சி என்ற - மக்கள் மத்தியில் இருக்கும் கருத்து அர்த்தமற்றுப்போகும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை - இன்று நடைபெறவிருக்கும் பொ.ஐ.முவின் மத்திய குழுக்கூட்டத்தில், ஜே.வி.பியுடனான கூட்டணி பற்றி எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ வெளியிட்ட கருத்துக் குறித்து, கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வியெழுப்பத் திட்டமிட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 10 நாட்களுக்குள் அகற்ற...

ஆனால், இன்று ஜனாதிபதி பாதுகாப்பு அமைசசுப் பொறுப்பை ஏற்று 10 நாட்கள் கடந்துவிட்ட நிலையிலும் குரங்குப்பாஞ்சான் முகாம் குறித்து அவர் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அப்படி நடவடிக்கை எடுத்தால் சமாதான முயற்சி குழப்பிவிடும் என அவர் கருதுகிறார் என எண்ணுகிறேன்.

நான் அன்று ஜனாதிபதி கூறியபடி விடுதலைப் புலிகள் முகாமை அகற்றுவதற்கு முயன்றிருந்தால் சமாதான முயற்சிகள் குழப்பமடைந்திருக்கும். இதனைக் கருத்தில் கொண்டே முகாமை அகற்றும் முயற்சியை எடுக்கவில்லை. எனவே எனது நடவடிக்கை சரியானதாகவே அமைந்துள்ளது. அதனை விடுத்து வீண்பழி சுமத்துவது ஜனாதிபதியின் இயலாமைத் தன்மையைக் காட்டுவதாக அமைகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு தேர்தல் ஒன்று தீர்வாகாது. ஆறு வருடங்களுக்கு ஆட்சிப் பொறுப்பை நடத்துவதற்கு மக்களின் ஆணை கிடைத்துள்ளதால் தேர்தல் இப்போதைக்கு அவசியமானதல்ல. எனினும் தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்கவும் தயாராகவே உள்ளோம் என்று மேலும் தெரிவித்தார்.




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.